4. முதலாம் இராஜாதிராஜன் அளித்த கொடையை செயற்படுத்திய அதிகாரிகள்

வாய்மொழியால் அரசனிட்ட ஆணை, எழுத்துவடிவம் பெற்று, அரண்மனையிலும், நாட்டார் வரிப்பொத்தகத்திலும் இடம்பெற்று, அவ்வவ்வூர்களில், எல்லை தெரித்துக் கல்லுங்கள்ளியும் நாட்டி, அறவோலை செய்தது வரை அனைத்துக் கட்டங்களிலும் உடனிருந்து பணி செய்தவர்களின் பெயரும் பதவியும் நிர்வாக நடைமுறையின் வரிசையிலேயே கூறப்பட்டுள்ளன. அவை வருமாறு:

அரசன் கூறிய ஆணையை எழுதிய முதல் நிலை அரசு அதிகாரி

1. அபிமான மேருப் பல்லவரையன்

2. ஓலை நாயகங்கள் - ஆணையினை ஒப்பிட்டு உரைப்படுத்தியோர்

1. உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்து நாரக்கண் மாராயன் சிங்களாந்தகனான விஜைய ராஜேந்திர பிரம்ம மாராயன்

2. விஜய ராஜேந்திர மஹாபலிவாணராஜன்
3. விஜய ராஜேந்திர இருக்கு வேளான்
4. விஜய ராஜேந்திரக் காலிங்கராஜன்
5. விஜய ராஜேந்திர வன்னாடுடையான்

3. கருமம் ஆராய்வோர் - வரியிலிட்டுக் கொள்க என்று சொல்லியோர்

1. நீலன் குடிதாங்கியான பல்லவ ராஜன்
2. வீரபத்திரன் தில்லைவிடங்கனான ஜயங்கொண்ட சோழப் பொத்தப்பிச் சோழன்

4. அ. உடன் கூட்டத்துக் கருமம் ஆராய்வோர் - மீண்டும் உறுதி செய்தோர்

1. ராஜேந்திரசிங்க வளநாட்டுப் பொய்கை நாட்டுப் பராக்கிரம சோழநல்லூருடையான் -பிச்சன் ஆதித்தனான விஜய ராஜேந்திர மூவேந்த வேளான்
2. ராஜாதிராஜ வளநாட்டுக் குறுக்கை நாட்டு ஜயங்கொண்ட சோழ நல்லூர்க் கிழவன் - பாலைக் கூத்தனான கல்லியாணபுராந்தக மூவேந்த வேளான்
3. விஜய ராஜேந்திர வளநாட்டு வண்டாழை வேளூர்க் கூற்றத்துப் பனங்காடிக்குடி உடையான் - சடையன் புத்தனான மீனவன் மூவேந்த வேளான்
4. ராஜராஜப்பாண்டி நாட்டு ராஜேந்திர சோழ வளநாட்டுக் கீழ் குண்டாற்றுச் சோழசிகாமணி நல்லூருடையான் - குமரன் சிவசரணமான செம்பியன் அணுத்திர மூவேந்த வேளான்
5. மேற்படிநாட்டு மிழலைக் கூற்றத்துப் பொன்பற்றி உடையான் -கோன் அம்பலக் கூத்தனான ராஜவிஜ்ஜாதிர மூவேந்த வேளான்
6. ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ராஜாதிராஜக் கோட்டத்து ஆகுடி நாட்டு அயண்டம் பாக்கத்திறைவெட்டின - குமரன் பாசூர்க் கூத்தன்
7. உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு அன்னியூருடையான் - நல்லத்தடிகள் ஆடவலானான பல்லவன் மூவேந்த வேளான்

8. அருமொழி தேவவளநாட்டு மங்கல நாட்டுத் திட்டைச்சேரி உடையான் - உடையான் ஆடவலானான வில்லவன் சோழ விழுப்பரையன்
9. விஜைய ராஜேந்திர வளநாட்டு ஆர்வலக் கூற்றத்து மும்முடி சோழ நல்லூர்க் கிழவன் - சிங்கானை புத்தனான தென்னவன் மூவேந்த வேளான்
10. ராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர்நாட்டுக் - கஞ்சாறன் சக்தி திருவடிகளான உத்தமசோழத் திருவிந்தளூர் நாட்டு மூவேந்த வேளான்
11. ஜயங்கொண்ட சோழ வளநாட்டுத் திருவெழுந்தூர் நாட்டுச் செங்குடிக் கிழவன் - கலியன் ஆதித்தன்
12. ராஜேந்திர சோழ வளநாட்டு ஆனாங்கூர் நாட்டு ஆனாங்கூர் கோனுமான - கூத்தனரியேறான அழகிய ராஜ மூவேந்த வேளான்
13. உய்யக் கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு அன்னியூருடையான் - நல்லத்தடிகள் சேனனான தான தொங்க விழுப்பரையன்
14. ஜயங்கொண்ட சோழ வளநாட்டு திருவெழுந்தூர் நாட்டு மலைக் குடையான் - ஐய்யாறன் குலதீபனான ராஜ வல்லப மூவேந்த வேளான்

ஆ. நடுவிருக்கை அதிகாரிகள்

1. கல்லியாணபுரங் கொண்ட சோழ வளநாட்டுத் தனியூர் ஸ்ரீராஜாதி ராஜச்சருப்பேதிமங்கலத்து -ஸாபஜண அதிராத்ரயாஜி
2. உப்பம் பிரால் - சோலைப் பிரான் பட்ட சோமயாஜி
3. கரிப்புறத்து - ஸ்ரீ மாதவ பட்டன்
4. கொற்ற மங்கலத்து - பற்பநாபபட்ட சோமயாஜி

இ. விடையில் கருமம் ஆராய்வோர்

1. ஜயங்கொண்ட சோழ வளநாட்டுத் திருவெழுந்தூர் நாட்டுச் சிவபாத சேகர நல்லூருடையான் -வேளான் திருநீலகண்டனான இருமுடி சோழ மூவேந்த வேளான்

2. ராஜாதிராஜ வளநாட்டுக் குறுக்கை நாட்டுப் பூபாலசேகர நல்லூருடையான்	- அரையன் கோயிலானான ராஜமகேந்திர மூவேந்த வேளான்
3. அருமொழி தேவ வளநாட்டு நென்மலி நாட்டுப் பரகேசரி நல்லூருடையான்	- அமலன் கருமாணிக்கமான கங்கை கொண்ட சோழ மூவேந்த வேளான்
4. அதிராஜராஜ வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துக் கடாரங்கொண்ட சோழ நல்லூர்க்கிழவன்	- அறிவாளன் பெரியானான ஜயங்கொண்ட சோழ விழுப்பரையன்
5. ஜயங்கொண்ட சோழ வளநாட்டு விளைநாட்டுக் கங்கைகொண்ட சோழ நல்லூர்க் கிழவன்	- வேளான் பகையடக்கியாந வளவன் மூவேந்த வேளான்
6. சஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பனையூர் நாட்டு ராஜராஜ நல்லூருடையான்	- பழிப்பிலி ஜயங்கொண்ட சோழனான அரிகுலகேசரி மூவேந்த வேளான்
7. உய்யக் கொண்டார் வளநாட்டு அம்பர்நாட்டு ஆலத்தூருடையான்	- திவாகரன் நின்றானான விக்கிரம சிங்க மூவேந்த வேளான்
8. ராஜராஜ வளநாட்டுப் பரவைச் சுற்றுப் பூண்டி உடையான்	- அத்தாணிக் கூத்தனான வானவன் மூவேந்த வேளான்
9. கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து ராஜராஜ நல்லூருடையான்	- வேளான் தாயனான செம்பியன் மீய் செங்கிளிநாட்டு விழுப்பரையன்
10. ,,	- நக்கன் மதுராந்தகனான ஆகவமல்ல குலாந்தக மூவேந்த வேளான்
11. ராஜராஜப் பாண்டி நாட்டு மதுராந்தக வளநாட்டு வடதலைச் செம்பில் நாட்டுக் கோன்	- கோநழகிய பாண்டியனான விஜைய ராஜேந்திரச் செம்பில் நாட்டுக்கோன்
12. ஜயங்கொண்ட சோழ வளநாட்டு குறும்பூர் நாட்டுக் கூற்றூர்க் கிழவன்	- தாயனாடவலானான உலகளந்த சோழ மூவேந்த வேளான்

13. கல்லியாணபுரங் கொண்ட சோழ வளநாட்டு வெண்ணிக் கூற்றத்துக் குவளைவேலி உடையான் - கோயில் சித்தனான ராஜாதி ராஜப்பல்லவரையன்
14. மேற்படி நாட்டுப் பாம்புணிக் கூற்றத்துக் கூடலூர்க் கிழவன் -ஆச்சன் வெண்காடநான நேரியன் மூவேந்த வேளான்
15. உய்யக் கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு மாதலைகுடையான் - சத்தி ஆடவலானான வீரவிச்சாதிர மூவேந்த வேளான்

ஈ. நடுவிருக்கை அதிகாரிகள்

ஆணையின் உரையினை மேற்பார்வையிட்டு ஏற்புச்சொல்லியோர்.

1. கல்லியாணபுரங் கொண்ட சோழ வளநாட்டுத் தனியூர் ஸ்ரீராஜாதி ராஜச் சதுர்வேதி மங்கலத்துப் பறியலூர் -ஸ்ரீவாசு தேவ பட்ட சோமயாஜி
2. பசலை சீராம பட்டன்*

இவர்கள் அனைவருடைய ஒப்புதல் மற்றும் மேற்பார்வையில் அரச ஆணை எழுதப்பட்டு வந்த பின்னர் இது அரண்மனையில் வரியில் (வருவாய்ப் பதிவேட்டில்) இடப்பட்டது. அப்பணியினை மேற்கொண்டோர் அடுத்துக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் பதவிப்பெயரில் மாளிகைமுதல் என்ற சொல் இடம் பெறுவதன் மூலம் அரண்மனைப் பதிவேடு என்ற முடிவுக்கு வரமுடிகிறது.

முதல் நிலையில் அரண்மனை வரிப்பொத்தகத்தில் எழுதி வரியிலிட்டவர்களின் பதவியும், பெயரும் வருமாறு:

1. புரவுவரித் திணைக்களத்துக் கண்காணிகள்

1. விஜைய ராஜேந்திர வளநாட்டு வண்டாழை வேளூர்க் கூற்றத்துச் சுரைக்குடையான் - பட்டாலகன் அம்பலக் கூத்தனான அவனி திவாகர மூவேந்த வேளான்
2. ராஜராஜ வளநாட்டுப் பேரெயிற் கூற்றத்து அருமுனைக் கிழான் - நக்கன் அரிகுலமல்லனான சோழ குல சூளாமணி மூவேந்த வேளான்

---

* எண் 1 முதல் எண் 4 ஈ வரையிலும் உள்ள அதிகாரிகள் அரசனின் நேர்முகப் பணியாளர்கள் என்பதைக் குறிக்கும் வகையில் அவர்களின் பெயர்ப் பதவிகளின் முன்னர் "நம் கருமம் ஆராயும்" என்ற தொடர் இடம்பெறுகின்றது.

3. ராஜேந்திர சிங்க வளநாட்டு மிறைக் கூற்றத்து மணலூர்க் கிழவன் - கணபதி ஆடவலானான சோளேந்திர சூளாமணி மூவேந்த வேளான்
4. மணலூர்க் கிழவன் - புத்தன் அடிகள்
5. ஜயங்கொண்ட சோழ மண்டலத்து விஜையராஜேந்திரக் கோட்டத்து மாங்காட்டு நாட்டு - செங்கலங்கிழான்

2. புரவுவரித் திணைக்கள அதிகாரிகள்

1. ஜயங்கொண்ட சோழ வளநாட்டு விளைநாட்டு அரசூருடையான் - . . . . . சாத்தன்
2. சத்திரிய சிகாமணி வளநாட்டு திருநறையூர் நாட்டு உத்தமசோழ நல்லூருடையான் - சுவரன் நாராயணனான மனுகுலகேசரி மூவேந்த வேளான்
3. ஜயங்கொண்ட சோழ வளநாட்டு முழையூர் நாட்டுக் குத்தமங்கல முடையான் - அமுதன் நள்ளாறன்
4. விஜைய ராஜேந்திர வளநாட்டு வண்டாழை வேளூர்க் கூற்றத்துப் பெரியன் குடையான் - தேவன் பிடாரனான கலிகால சோழ மூவேந்த வேளான்
5. கல்லியாணபுரங் கொண்ட சோழ வளநாட்டு முடிச்சோணாட்டு அரிதாய மங்கலமுடையான் - ஆதித்தன் தற்பரம்பொருளான பெருநற்கிள்ளிச் சோழ மூவேந்த வேளான்
6. ராஜராஜ வளநாட்டுப் பரவைச் சுற்றுப் பூண்டியுடையான் - அத்தாணிச் சீயாரூர்
7. உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு இளையான் குடையான் - வீதியன் மருதமாணிக்கம்

3. மாளிகை முதலுக்குப் புரவுவரித் திணைக்கள அதிகாரி

நித்த வினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூருடையான் - ஆரூர்க் கண்ணன்

4. வரிப்பொத்தக அதிகாரிகள்

1. சஷத்திரிய சிகாமணி வளநாட்டு வேளாநாட்டு ராஜமல்லச் சதுர்வேதி மங்கலமுடையான் - நின்றான் போதேஸ்வரன்

2. ராஜராஜ வளனாட்டுக் காந்தார நாட்டுக் கோனூருடையான் - சூலபாணி அருமொழி
3. அதிராஜராஜ வளநாட்டு முழையூர் நாட்டு வீழியூருடையான் -வேளான் அரங்கன்
4. உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர்நாட்டுக் கீரனூருடையான் - மருதனாயக்கொழுந்து

5. முகவெட்டிகள்

1. சஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டுக் காட்டூருடையான் -ஊரான் திகையொளி
2. ஜயங்கொண்ட சோழ வளநாட்டுத் திருவெழுந்தூர்நாட்டுச் சிவபாத சேகர நல்லூருடையான் - வேளான் கணபதி
3. நித்த வினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துப் பட்டமுடையான் - புகழனுத்தமன்
4. விஜய ராஜேந்திர வளநாட்டு வலிவலக் கூற்றத்து இறையான் குடையான் - மயிந்தன் சிங்கன்
5. பாண்டிக் குலாசனி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பெரு மங்கலமுடையான் - தேவன் ஐய்யாறன்
6. விஜய ராஜேந்திர வளநாட்டு இடையளநாட்டு மணற்குடையான் - பசுவதி அரங்கன்
7. மேற்படிநாட்டு வாய்மூர்க்கிழவன் - சந்திரசேகரன் வாய்மூர்

6. மாளிகை முதலுக்கு முகவெட்டி

சஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டு விசலூர்க் கிழவன் -பொற்காரை கூத்தாடி

இவர்களை அடுத்து, அடுத்த நிலையான வரிப்பொத்தகத்தில் எழுதியோர் பெயர்களும் பதவிப்பெயர்களுடன் குறிக்கப்படுகின்றன. அவை வருமாறு:

7. வரியிலீடு

1. மேற்படி நாட்டுச் செற்றூர்க் கூற்றத்து மருதத்தூருடையான் -பூரன் அருமொழி

2. மேற்படி நாட்டுப் புதுச்சேரி உடையான் - கெருளன் சற்பன்
3. ஆதமங்கலமுடையான் - பராந்தகன் ஜனனாதன்
4. கொற்றமங்கலமுடையான் - மாதேவன் தளிக்குளவன்
5. மாங்குடையான் - சேநன் செம்மான்
6. சஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பனையூர் நாட்டுத் திருவாஞ்சிய முடையான் - ஊரான் சற்பன்
7. மருகல் உடையான் - சீராளன் சீராமன்

8. வரிப்பொத்தகக் கணக்கு

1. அத்திப்புலியூருடையான் - மாதேவன் வெண்காடன்
2. நெடுஞ்சேரிக்குடையான் - பரமேஸ்வரன் பவழக்குன்று
3. கழுமலமுடையான் - மணியன் ஆடவலான்
4. சஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பனையூர் நாட்டு மருதம் புஞ்சை உடையான் - குமரன் பட்டாலகன்
5. மேற்படி நாட்டுச் சிறு குடையான் - அப்பிரமேயன் அரங்கன்
6. காட்டூருடையான் - மருதன் குஞ்சரமல்லன்
7. கடையக் குடையான் - ஒற்றியாதித்தன்
8. பாம்புரமுடையான் - வெண்காடன் சிவன்

9. பட்டோலை

1. சஷத்திரிய சிகாமணி வளநாட்டு வேளாநாட்டு நெற்குப்பை உடையான் - மூர்த்தி ஸ்ரீ குருகூரான வளவ குல நாராயண மூவேந்த வேளான்
2. வல்ல முடையான் - செங்கதிர் வேங்கடம்
3. மண்ணனூர் உடையான் - வேளான் அருமொழியான வளவகுல சுந்தர மூவேந்த வேளான்
4. ஆலத்தூருடையான்
5. விஜைய ராஜேந்திர வளநாட்டுப் பாலையூர் வாட்கைச் சிங்களாந்தக நல்லூருடையான் - இராமன் வினாசகன்
6. குமாரமங்கலமுடையான்
7. போதிமங்கலமுடையான்

10. வாசித்த வரிப்பொத்தகக் கணக்கு

சஷித்திரிய சிகாமணி வளநாட்டுப் பாலையூர் நாட்டுச் சிறுகுடையான் -அப்பிரமேயன் அரங்கன்

இப்பணியில் உடன் இருந்து நிலமளந்து வரியிலிட்டோர்.

11. வரியிலீடு

மேற்படிநாட்டுத் திருவாஞ்சிய முடையான் - ஊரான் சற்பன்

12. பட்டோலை

1. விஜைய ராஜேந்திர வளநாட்டுப் புலையூர் வாட்கைச் சிங்களாந்தக நல்லூருடையான் - இராமன் வினாசகன்

இரண்டாவதாகக் கள்ளார் மங்கலமும், திருவிந்தளூரோடு சேர்க்கப்பட்ட நிலம் நீக்கப்பட்ட பின்னுள்ள பெரியன்குடி, திருவிந்தளூரின் ஒரு பகுதி ஆகியன இணைக்கப்பட்டதைக் கூறுமிடத்து, இதுவரை கூறப்பட்ட அதிகாரிகள் அனைவரும் மீண்டும் கூறப்படுகின்றனர். அது போல வரி நீக்கம் செய்து, அவ்வரிகளையும் அவர்களே (பயனாளிகள் 130 பேரும்) அனுபவித்துக் கொள்ளுமாறு (ஆண்டு 35 நாள் 100) ஆணையிட்ட போதும் அதைச் செயல்படுத்திய அதிகாரிகளாக மீண்டும் அவர்களே கூறப்படுகின்றனர். அரசனுக்கு ஓலை எழுதும் அதிகாரி மட்டும் மாறியிருக்கிறார். அவ்வதிகாரியின் பெயர் - பூவேந்திர சோழ தமிழரையன்.

மேற்குறித்த 11 ஊர்களையும் அவ்வவ் ஊர்களுக்குச் சென்று அளந்து பிடிசூழ்ந்து பிடாகை நடப்பித்து, எல்லையிட்டு அறவோலை செய்யுமாறு அரசனால் பணிக்கப்பட்ட அதிகாரிகள் வருமாறு:

1. கண்காணி

சோலை திருச்சிற்றம்பல முடையான் ஜயங்கொண்ட சோழக் கோசலை நாடாழ்வான்

2. நாடுவகை செய்வான்

ஜயங்கொண்ட சோழ வளநாட்டு விளைநாட்டுக் கரிகால சோழ நல்லூருடையான் நாகையானாதித்தனான கண்டராதித்த மூவேந்த வேளான்

3. புரவுவரித்திணைக் களத்துக் கீழ் முகவெட்டி

1. இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டுச் சோழேந்திர சிங்க நல்லூருடையான் தேவன் மாணிக்கன்

2. பட்டன் கல்லியாணபுரங்கொண்ட சோழ வளநாட்டு வீர சோழ வளநாட்டுத் திரிபுவன மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்துக் கொரோவி நாராயண பட்டன்

இவர்களை வரவேற்று உடன் நின்று எல்லை தெரிந்து மேற்படி ஊர்களைப் பிடிசூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங்கள்ளியும் நாட்டி அறவோலை செய்து கொடுக்குமாறு அரசன் இட்ட ஆணையை அவ்வூர்க்கு அனுப்பும் வகையில், ஆஹவமல்ல குலகால விழுப்பரையன் எழுதினான். அவ்வாணை நாட்டோர்க்குச் சென்று திருமந்திரவோலை சேர்ந்ததும் எதிர் எழுந்து சென்று, தொழுது வாங்கி தலைமேல் வைத்து எல்லை தெரித்துக்காட்டிப் பிடிசூழ்ந்து, பிடாகை நடந்து கல்லுங் கள்ளியும் நாட்டி அறவோலை செய்த நாட்டார், ஊர்களிலார் மற்றும் அதிகாரிகளின் பெயர்கள் வருமாறு:

1. இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு நாட்டார்
2. புரவுவரி திணைக்களத்துக் கீழ்முக வெட்டி - சோளேந்தர சிங்க நல்லூருடையான் தேவன் மாணிக்கன்
3. கண்காணி - பெருந்தரம் சோலை திருச்சிற்றம்பல முடையாநாந ஜயங்கொண்ட சோழக் கோசலை நாடாழ்வான்
4. இராஜாதிராஜ வளநாட்டுக் கீழ்கூறு வகை செய்வானான ஜயங்கொண்ட சோழ வளநாட்டு விளைநாட்டுக் கலிகால சோழ நல்லூருடையான் நாகயந் ஆதித்தனான கண்டராதித்த மூவேந்த வேளான்
5. பட்டக் கண்காணி - கல்லியாணபுரங் கொண்ட சோழ வளநாட்டு வீரசோழ வளநாட்டுத் திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலத்துக் கொரோவி நாராயண பட்டர்
6. இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு ஊர்களிலார்

5. இரண்டாம் இராஜேந்திரனின் அறக்கொடை

இச்செப்பேட்டின் அடுத்தபகுதி ஏடு 19, பின்பக்க வரி 7 முதல் தொடங்குகிறது. இரண்டாம் இராஜேந்திரன் தனது நான்காம் ஆட்சியாண்டு 69-ஆம் நாளில், கங்கை கொண்ட சோழபுரம் அரண்மனையிலமைந்த சோழகேரளன் மாளிகைப் பகுதியில், குளிக்கும் நேரத்தில் இவ்வாணையினை இட்டதாகத் இச்செப்பேடு தெரிவிக்கிறது. இவ்வாணை திருவிந்தளூர் நாட்டு நாட்டார், குறுக்கை நாட்டு நாட்டார், நாங்கூர் நாட்டு நாட்டார், பிரம்மதேயக் கிழவர்கள், தேவதான, பள்ளிச்சந்த, கணிமுற்றூட்டு, வெட்டப்பேறு, அறச்சாலாபோகம் உள்ளிட்ட நில உரிமையுடையோர்கள், ஊர்களிலார், நகரங்களிலார் ஆகியோருக்கு அனுப்பப்படுவதாகக் குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர்

நாட்டிலமைந்த பனம்பள்ளி, அகனக்குடி, அருவாப்பாட்டம்[1], வானவநல்லூர், அருமொழிதேவ நல்லூர், கோட்டூர், ஏனாதிமங்கலம், கருப்பூர், ஆனை நல்லூர், திருவிந்தளூர்த் திறப்பான சமணப்பள்ளி, திருவிந்தளூர்த் திறப்பான சாக்கியப்பள்ளி, மதுராந்தகநல்லூர், கஞ்சாற்றின் திறப்பான பிரம்மதேயம் நாரணமங்கலம், மணிகங்கை ஊரில் உள்ள தேவர்க்குரிய நிலம் தவிர்ந்த வெள்ளான் வகை நிலங்கள், மேற்சென்னிநல்லூர், சேமங்கலம், ராஜசிகாமணி நல்லூர், செம்பியன் நென்மலி, நெல்வாயில், கங்கைகொண்ட சோழநல்லூர், கடுவன்குடி, நெடுஞ்சேரிக்கள சாசனமங்கலம் ஆகிய 22 ஊர்களையும், இராஜாதிராஜ வளநாட்டுக் குறுக்கை நாட்டில் அமைந்த கந்தணம் புத்தூர், பூபாலசேகர நல்லூர், எயினங்குடி, அந்நியூரில் ஏகபோகம் நீங்கலான வெள்ளான் வகை நிலங்கள், திருப்பாலைக்குடி, பூதிகுடி ஆகிய 6 ஊர்களையும், திருவிந்தளூர் நாட்டு பிரம்மதேயங்களாகிய உழுத்துக் குப்பையான மஹிமாபரண மங்கலம், மணிகங்கை, சவர்ணக்காணியான ராஜாஸ்ரயமங்கலம், வைகானஸக்காணியான விட்டிலூர் ஆகிய நான்கு ஊர்களையும் சேர்த்து மொத்தம் 32 ஊர்களும், நிலங்களும் ஒன்றாக்கப்பட்டு, அதற்கு அகர பிரமதேயம் இராஜேந்திரச் சதுர்வேதி மங்கலம் என்ற புதிய பெயர் கொடுக்கப்பட்டது.[2]

இவ்வாணை வழங்கப் பெறுவதற்கு முன் அவ்வூர்களில் உரிமை உடையோராய் இருந்த குடிகளை நீக்கிவிட்டுக் காராண்மை, மீயாட்சி அனைத்தையும் உள்ளடக்கியதாக, முதலாம் இராஜாதிராஜனால் வழங்கப்பட்ட சோழகுல நாராயணச் சதுர்வேதி மங்கலத்தோடு இணைத்து, வேதங்களிலும், சாத்திரங்களிலும்

---

1. அருவாப்பாடி என்றும் பிறிதொரிடத்தில் குறிக்கப்படுகிறது. இங்கு இடம் பெறும் அருவாப்பாட்டம் என்ற பெயருக்கு நிகராகச் சாரூர், வாய(ல)ப்பாடி என்ற இரு ஊர்கள் சமஸ்கிருதப்பகுதியில் குறிக்கப்படுகிறது. ஒருக்கால் எழுதியோரின் தவறால் நேர்ந்த எழுத்து மாற்றம் இவ்வாறு படிக்குமாறு உள்ளதாகலாம் (பார்க்க. பக்கம் 43)

2. இங்கு 'நெல்வாயில்' என்று மட்டுமே இருக்க, சமஸ்கிருதப் பகுதியில் சாலிவனம், நெல்வாயில் என இரு ஊர்களாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. நெல்வாயில் என்பதன் சமஸ்கிருதமாற்றமே சாலிவனம் என்பதாக இருக்க வாய்ப்புள்ளது. நெடுஞ்சேரிக்கள சாசன மங்கலம் என்ற ஊர் ஒரே பெயராகத் தமிழில் இடம் பெற சமஸ்கிருதப்பகுதியில், சாசனமங்கலம், நெடுஞ்செய் என இரு ஊர்களாகப் படிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏகபோகம் நீங்கலான அந்நியூர் என்று தமிழில் அமைந்திருக்க, அந்நியூர், பாஷாலம் என்ற இரு ஊர்களாக அங்குப் படிக்கப்பட்டுள்ளன. இராஜாஸ்ரய மங்கலம் 'சவர்ணக்காணி' என்று இங்குக் குறிக்கப்பட்டிருக்க அவ்வூர்க்கு மாற்றாகப் பெற்ற சேனிட்டூர் என்ற குறிப்பு சமஸ்கிருதப்பகுதியில் உள்ளது. வைப்பூரையும், திருவிந்தளூரின் சில பகுதிகளையும் இணைத்து உருவாக்கப்பட்ட 'அழகிய சோழநல்லூர்' என்று தமிழ்ப்பகுதி குறிக்க, சமஸ்கிருதப்பகுதியில் இரண்டும் வேறுவேறாகக் குறிக்கப்பட்டுள்ளது. இறுதியாக சமஸ்கிருதப் பகுதியில் மொத்தம் 44 ஊர்கள் என்ற எண்ணிக்கை இருப்பதாகவும் அறிகிறோம் (பார்க்க. பக்கம் 44). தமிழில் மொத்த ஊர் எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை.

மணிகங்கை என்பது ஊரின் பெயர் என்பது தமிழ்ப்பகுதியால் விளங்குகிறது. சமஸ்கிருதப் பகுதியில் இது குறிப்பிட்ட பிரிவினரால் வணங்கப்படும் தெய்வத்தின் பெயராகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது (பார்க்க. பக்கம் 43).

வல்லவராயும் அவற்றை விரித்துரைக்க வல்லவராயும் இருக்கும் 730 சதுர்வேதி பட்டர்களுக்கு[1] மேற்குறித்த ஊர்கள் இரண்டாம் இராஜேந்திரனின் நான்காம் ஆண்டு 83வது நாளில் வரிநீக்கிப் (ஏடு-25 பின்பக்க வரி 9) பிரம்மதேய இறையிலியாகக் கொடுக்கப்பட்டது. மீண்டும் ஆறாம் ஆட்சியாண்டு 210 ஆம் நாளில், மேற்குறித்த அதே அரண்மனையில் குளிக்குமிடத்து மேலும் ஒரு தானம் அளிக்கப்பட்டது. வைப்பூரையும், திருவிந்தளூரில் சில நிலங்களையும் இணைத்து உருவாக்கப்பட்டிருந்த அழகிய சோழநல்லூர் என்றொரு ஊரைத் தன் ஐந்தாம் ஆட்சியாண்டு முதல் முன்தேதியிட்டு வரிதவிர்த்து, இராஜேந்திரச் சதுர்வேதி மங்கலத்தோடும் ஒன்றிணைத்து, அதே சதுர்வேதி பட்டர்களுக்கு வழங்கப்பட்டது. இவ்வழகிய சோழநல்லூர் மன்னனின் 6-ஆவது ஆட்சியாண்டின் 146-ஆம் நாளிலிருந்து வரியிலிடப்பட்டது. மேற்படிக் கொடைகள் அனைத்தையும் ஒன்றிணைத்து இவ்வரசனின் ஒன்பதாம் ஆட்சியாண்டின் முந்நூற்று ஐம்பதாம் நாளில் கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள கங்கை கொண்ட சோழன் மாளிகையில் அமைந்த நீராட்டு மண்டபத்தில் உள்ள இராஜேந்திர சோழ மாவலிராஜன் என்னும் அரச இருக்கையில் அமர்ந்து அகர பிரமதேயம் இராஜேந்திர மங்கலம் என்ற பெயரில் சதுர்வேதி மங்கலமாக்கிப் பிரம்மதேய இறையிலியாக அரசன் வழங்கினான் எனத் தெரிவிக்கிறது இச்செப்பேடு.[2]

இந்த ஆணை செயல்படுத்தப்பட்ட முறையினையும், ஒவ்வொரு ஊரிலும் இருந்த மொத்த விளைச்சல் நிலங்கள், அதில் இடம் பெறும் நன்செய்; புன்செய் நிலங்கள், இவையன்றி ஊரின் பல்வேறு காரணங்களுக்கான பயன்பாட்டு நிலங்கள் ஆகியவற்றை மிகச்சரியான அளவுகளுடன் விளக்கமாகத் தெரிவிக்கிறது செப்பேடு. மேலும், அரச ஆணை செயல்படுத்தப்படும் முறைகளை விவரிக்கும் முகத்தான், அரசனுக்கருகே அரண்மனையிலிருந்த அதிகாரிகள், அளந்து வரியிலிடும் அதிகாரிகள் என இரண்டடுக்கு அதிகாரிகளையும் குறிக்கிறது. அதனைத் தொடர்ந்து இவ்வாணை திருவிந்தளூர், குறுக்கை, நாங்கூர் ஆகிய நாட்டு நாட்டார்களுக்கு அனுப்பப்படுவதையும், அவ்வாறு அனுப்பப்படும் போது அங்குச் சென்று பிடிசூழ்ந்து, பிடாகை நடந்து கல்லுங்கள்ளியும் நாட்டி எல்லை தெரித்து, அறவோலை செய்ய அரண்மனையிலிருந்து உடன் அனுப்பப்பட்ட அதிகாரிகளையும், திருவிந்தளூர் அதிகாரிகளையும், செயல்படுத்தியதோடு சாட்சியாக உடன் நின்று கையெழுத்திட்டவர்கள் வரை அனைவரையும் குறிப்பதன் மூலம் நிர்வாக நடைமுறையினையும் தெளிவாக இங்கும் குறிப்பிடுகிறது செப்பேடு.

---

1. சமஸ்கிருதப் பகுதியில் 656 வேதம் வல்லாருக்கு வழங்கப்பட்ட கொடை என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ்ப்பகுதியில் குறிக்கப்படும் பயன்பட்டோர் எண்ணிக்கை விவரப்படி 664 பேர் என்பது அறியப்படுகிறது.
2. வீரராஜேந்திரனின் இரண்டாம் ஆட்சியாண்டில் 127-ஆம் நாளில் இவ்வாணை செப்பேடுகளில் எழுதி முடிக்கப்பட்டதாகச் சமஸ்கிருதப் பகுதியில் கூறப்படுகிறது.

6. இரண்டாம் இராஜேந்திரன் கொடுத்த ஊர்களும் நில அளவுகளும்

1. பனம்பள்ளி

மொத்த நிலம்

எழுபத்தாறே முக்காலே நாலுமாவின் கீழ் அரையே நாலுமாக்காணி முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமா

நீங்கு நிலம்

ஒன்றே ஒன்பதுமா முக்காணிக்கீழ் அரையே நாலுமாக்காணி அரைக்காணிக் கீழ் எட்டுமா
[ஊர்இருக்கை, ஸ்ரீகோயில்கள், திருமுற்றங்கள், திருநந்தவனங்கள், ஊருணி, குளம், பறைச்சேரி, சுடுகாடு]

மீதி விளை நிலம்

எழுபத்தைந்தே ஒன்பதுமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே நாலுமா முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

அதன்வழிவரும் நெல் : 2500 கலம்.

2. அகனக்குடி

மொத்த நிலம்

முப்பதே முக்காலே நாலுமாக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் எழுமாவரை யரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே ஒருமா.

நீங்கு நிலம்

ஒன்றே ஆறுமாவரைக்காணிக்கீழ் முக்காலே அரைமா முந்திரிகைக் கீழரையே யிரண்டுமா
[ஊர்இருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம், ஊருணி, குளம், பறைச்சேரி, ஆகுலச்சேரி, கண்மாளச்சேரி, சுடுகாடு]

மீதி விளை நிலம்

இருபத்தொன்பதரையே மூன்றுமாக்காணிக்கீழ் அரையே இரண்டுமா முந்திரிகைக்கீழ் நாலுமா.

அதன்வழிவரும் நெல் : 1200 கலம்.

3. அருவாய்ப்பாடி

மொத்த நிலம்

இருபத்திரண்டரையே நாலுமாவரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே மூன்றுமா அரைக்காணிக்கீழ் எட்டுமா.

நீங்கு நிலம்

முந்திரிகைக்கீழ் அரையே இரண்டுமா.
(பறைச்சேரி)

மீதி விளை நிலம்

இருபத்திரண்டரையே நாலுமாவரைக்காணிக்கீழ் ஆறுமாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டுமா.

அதன்வழிவரும் நெல் : 1600 கலம்.

4. வானவன் நல்லூர்

மொத்த நிலம்

பதினெட்டே நாலுமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே நாலுமாக்காணி அரைக்காணிக் கீழ் எட்டுமா.

நீங்கு நிலம்

இருமாவரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே இரண்டுமா
(ஊரிருக்கை, பறைச்சேரி)
ஒன்றரையே ஒருமா முந்திரிகைக் கீழரையே இரண்டுமா
(இவ்வூரின் நடுவில் குறுக்கிடும் மண்ணி வாய்க்காலில் அடங்கியது)

மீதிவிளை நிலம்

பதினேழே காணி அரைக்காணிக்கீழ் அரையே காணி அரைக்காணிக்கீழ் எட்டுமா.

அதன்வழிவரும் நெல் : 1200 கலம்.

5. அருமொழிதேவ நல்லூர்

மொத்த நிலம்

அறுபத்தைந்தே முக்காலே ஒருமாவரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே அரைமா முந்திரிகைக்கீழ் அரையே இரண்டுமா.

நீங்கு நிலம்

இரண்டே இரண்டு மாக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காணிக்கீழ் முக்காலே ஒருமா.
(ஊரிருக்கை, ஸ்ரீகோயில்கள், திருமுற்றங்கள், திருநந்தவனங்கள், குளங்கள், கன்றுநிலை பாழ், கண்மாளச்சேரி, சுடுகாடு, பறைச்சேரி)

மீதி விளை நிலம்

அறுபத்து மூன்றரையே மூன்றுமா முக்காணிக்கீழ் அரையே நாலுமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமா.

அதன்வழிவரும் நெல்: 2600 கலம்.

6. கோட்டூர்

மொத்த நிலம்

பதிநாலே ஏழுமா முந்திரிகைக்கீழ் அரையேயொருமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

நீங்கு நிலம்

மும்மாவரை

[ஊர் இருக்கை, குளம்]

மீதி விளை நிலம்

பதிநாலே மும்மாவரை முந்திரிகைக்கீழ் அரையே ஒருமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

அதன்வழிவரும் நெல் : 750 கலம்.

7. ஏனாதிமங்கலம்

மொத்த நிலம்

பதிநாலரையே நாலுமாக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழரையே யரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

நீங்கு நிலம்

ஒன்பது மாவின் கீழ் அரையே ஒருமாவரைக் காணி முந்திரிகைக் கீழ் நாலுமா.

[ஊர் நத்தம்]

மீதி விளை நிலம்

பதிநாலே காலே காணி அரைக்காணிக்கீழ் ஒன்பதுமா.

அதன்வழிவரும் நெல் : 800 கலம்.

8. கருப்பூர்

மொத்த நிலம்

பதிநாலரையே நாலுமாக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே அரைக்காணிக்கீழ் நாலுமா.

நீங்கு நிலம்

ஒன்பது மாவின் கீழ் அரையே ஒருமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

[ஊர் நத்தம்]

மீதி விளை நிலம்

பதிநாலே காலேகாணி அரைக்காணிக்கீழ் ஒன்பது மா.

அதன்வழிவரும் நெல் : 800 கலம்.

9. ஆனைநல்லூர்

மொத்த நிலம்

இருபத்தஞ்சரையே மும்மாவரை அரைக்காணிக்கீழ் காலே முக்காணிக்கீழ் முக்காலே ஒருமா.

நீங்கு நிலம்

ஒருமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமா.
[குளம்]

மீதி விளை நிலம்

இருபத்தைந்தரையே ஒருமா முக்காணி முந்திரிகைக்கீழ் ஒன்பது மா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமா.

அதன்வழிவரும் நெல்: 1200 கலம்.

10. திருவிந்தளூர்[1] (திறப்பு - ஊரவைக்குச் செலுத்தும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட) சமணப்பள்ளி

மொத்த நிலம்

நாலே எட்டுமாவரைக்காணிக் கீழ் முக்காலே நாலுமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் எட்டுமா.

நீங்கு நிலம்

ஒன்றே மூன்றுமாவரைக்காணி.
(இவ்வூர் நிலத்தின் நடுவே குறுக்கிடும் வாய்க்கால் நீரோடு காலில் அடங்கியது.)

மீதி விளை நிலம்

மூன்றே காலின்கீழ் முக்காலே நாலுமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் எட்டுமா.

அதன்வழிவரும் நெல் : 20 கலம்.

11. திருவிந்தளூர்ப் (திறப்பு - ஊரவைக்குச் செலுத்தும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட) பௌத்தப்பள்ளி

மொத்த நிலம்

எட்டே முக்காலே மும்மாவரையின் கீழ் முக்காலே மூன்று மா.

இதன்வழிவரும் நெல் : 250 கலம்.

12. மதுராந்தக நல்லூர்

மொத்த நிலம்

இருநூற்று நாற்பத்தைந்தே முக்காலே ஒருமா முக்காணி அரைக்காணிக்கீழ் நாலுமா.

---

1. திருவிந்தளூர் சமஸ்கிருதப் பகுதியில் 'இந்துகிராமம்' என்று குறிக்கப்படுகிறது.

நீங்கு நிலம்

பதினேழே நாலு மாக்காணி அரைக் காணிக்கீழ் மூன்று மாக்காணி அரைக்காணிக் கீழ் எட்டுமா.

(ஊரிருக்கைகள், ஸ்ரீ கோயில்கள், திருமுற்றங்கள், திருநந்தவனங்கள், குளங்கள், கண்மாளச்சேரி, பறைச்சேரி, சுடுகாடு, வெளியூருக்கு நீர்பாயும் வாய்க்கால்.)

மீதி விளை நிலம்

இருநூற்று இருபத்தெட்டரையே இரண்டுமாவரையின் கீழ் அரைமா முந்திரிகைக்கீழ் அரையே இரண்டுமா.

இதன்வழிவரும் நெல் : 11,500 கலம்.

13. நாரணமங்கலம் (கஞ்சாறு ஊரவைக்குச் செலுத்தும் வரியிலிருந்து விலக்குப்பெற்ற பிரம்மதேயம்)

மொத்த நிலம்

ஒன்பதேகாலே காணிக்கீழ் முக்காலே மூன்றுமாக்காணிக் கீழ் காலே ஒரு மா.

நீங்கு நிலம்

ஒன்பது மாவரையே அரைக்காணி முக்காணிக்கீழ் ஏழுமா அரைக்காணி முந்திரிகைக் கீழ் நாலுமா.

(ஊரிருக்கை, குளம், பறைச்சேரி.)

மீதிவிளை நிலம்

எட்டே முக்காலே அரைமா முந்திரிகைக்கீழ் அரையே எட்டுமா முந்திரிகைக்கீழ் அரையே இரண்டுமா.

இதன்வழிவரும் நெல் : 560 கலம்.

மணிகங்கை தேவர் கோயிலுக்குரியது நீக்கி வெள்ளான் வகையில் அமைந்த நிலம்

பதினொன்றே முக்காலே காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் ஒன்பது மா முக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே நாலுமா.

இதன்வழி நெல் : 650 கலம்.

14. மேற்சென்னிநல்லூர்

மொத்த நிலம்

இருபதே முக்காலே அரைமா அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்கால்.

நீங்கு நிலம்

ஏழு மா.
(குளம்)

மீதி விளைநிலம்

இருபதே அரைமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் கால்.

இதன்வழிவரும் நெல்: 1000 கலம்.

15. சேமங்கலம்[1]

மொத்த நிலம்

நாற்பத்து நாலரையே மூன்று மாக்காணிக்கீழ் ஒன்பது முக்காணிக் கீழ் முக்காலே ஒருமா.

நீங்கு நிலம்

இரண்டே முக்காலே காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே நாலு மாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

(ஊரிருக்கை, ஸ்ரீ கோயில்கள், திருமுற்றங்கள், திருநந்தவனங்கள், ஆநிரைகள் நிற்றற்குரிய பாழ்நிலம், ஊருணி, குளம், பறைச்சேரி)

மீதிவிளை நிலம்

நாற்பத்தொன்றே முக்காலே மூன்று மாக்காணி முந்திரிகைக்கீழ் அரையே முந்திரிகைக் கீழ் அரையே இரண்டு மா.

இதன்வழிவரும் நெல் : 2500 கலம்.

(பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட (நம் ஐய்யர்) முதலாம் ராஜேந்திரனின் 18-ஆம் ஆட்சியாண்டு முதல் இறைகட்ட ஆணையிட்ட படி இந்த நெல் வரி அளவிடப்பட்டதாகக் குறிக்கப்படுகிறது.)

16. ராஜசிகாமணி நல்லூர்

மொத்த நிலம்

இருபத்தேழே முக்காலே நாலுமா முக்காணிக்கீழ் இரண்டு மாக்காணி அரைக்காணிக்கீழ் முக்காலே ஒருமா.

நீங்கு நிலம்

ஒன்றே நாலுமாக்காணிக்கீழ் மூன்றுமா.
(ஊரிருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம், ஐய்யன்கோயில், ஊருணி, குளம், பறைச்சேரி, கண்மாளச்சேரி, சுடுகாடு)

---

1. சேமங்கலம், சமஸ்கிருதப் பகுதியில் 'ஜெயமங்கலம்' என்று குறிக்கப்படுகிறது.

மூன்றுமா முக்காணி அரைக்காணிக்கீழ் முக்காலே அரைமா அரைக்காணி (இவ்வூர் நிலத்தின் நடுவே குறுக்கிடும் நாட்டார் வாய்க்காலில் அகப்பட்ட நிலம்.)

மீதி விளைநிலம்

இருபத்தாறரையே ஒருமாவரை முந்திரிகைக்கீழ் அரையே மூன்றுமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமா.

இதன்வழிவரும் நெல்: 1152 கலனே குறுணி நானாழி.

17. செம்பியன் நென்மலி

மொத்த நிலம்

எட்டே எண்மாவரை முந்திரிகைக்கீழ் ஒருமா.

நீங்குநிலம்

ஆறுமா முக்காணி அரைக்காணிக்கீழ்க் கால்.
(ஊர் இருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம், ஐய்யன்கோயில், ஊருணி குளம், கண்மாஞ்சேரி, பறைச்சேரி)

ஒருமா முந்திரிகைக் கீழ் அரையே நாலு மாக்காணி அரைக்காணி.

(இவ்வூரில் குறுக்கிடும் நாட்டார் வாய்க்காலில் அடங்கியது.)

மீதி விளைநிலம்

எட்டே அரைமா முந்திரிகைக்கீழ் ஒருமாவரை அரைக்காணி.

இதன்வழிவரும் நெல்: 347 கலனே இருதூணிபதக்கு நாநாழி.

18. நெல்வாயில்

மொத்த நிலம்

பதினேழே முக்காலே நாலு மாவரையின் கீழ் மூன்று மாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமாக்காணி.

நீங்கு நிலம்

ஒன்றே ஆறுமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் மூன்றுமாவின் கீழ் முக்காலே ஒருமா.

(ஊரிருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம், குளம், கண்மாளச்சேரி, சுடுகாடு)

மீதி விளைநிலம்

பதினாறரையே மூன்றுமாவரைக்காணிக்கீழ் அரைக்காணிக்கீழ் எட்டுமா.

இதன்வழிவரும் நெல் : 910 கலம்.

19. கங்கை கொண்ட சோழ நல்லூர்

மொத்த நிலம்

இருபத்துமூன்றே மும்மாவரையரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே ஒருமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமா.

நீங்கு நிலம்

முக்காணிக் கீழ் முக்காலே ஒருமா.
(பறைச்சேரி)

மீதி விளைநிலம்

இருபத்துமூன்றே இரண்டுமா முக்காணி அரைக்காணிக் கீழ் முக்காலே முக்காணிக்கீழ் முக்காலே ஒருமா.

அதன்வழிவரும் நெல் : 1000 கலம்.

20. கடுவன்குடி

மொத்த நிலம்

ஐம்பதே ஆறுமாக்காணி அரைக்காணிக்கீழ் காலே காணி அரைக்காணிக் கீழ் கால்.

நீங்கு நிலம்

அரையே இருமாவரை அரைக்காணிக்கீழ் அரையே அரைக்காணிக்கீழ் எட்டுமாவும்.
(ஊரிருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம், திருநந்தவனம்,குளம் கண்மாஞ்சேரி, பறைச்சேரி, சுடுகாடு)
அரையே அரைக்காணியும்
(இவ்வூர் நிலத்தை நடுவிட்டுக் குறங்கறுத்துப் போன நீடூர் வாய்)

மீதி விளைநிலம்

நாற்பத்தொன்பதே மும்மாவரை முந்திரிகைக்கீழ் அரையே நாலுமா முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே இரண்டுமா.

இதன்வழிவரும் நெல் : 2400 கலம்.

21. நெடுஞ்சேரிக்கள சாசன மங்கலம்

மொத்த நிலம்

பதினைஞ்சே இருமாவரை அரைக்காணிக்கீழ்க் காலே அரைமா முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமா.

நீங்கு நிலம்

முக்காலே மூன்று மாக்காணி.
(ஊரிருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம், திருநந்தவனம்,குளம்)

மீதி விளைநிலம்

பதின்நாலே மூன்றுமா முக்காணி அரைக்காணிக்கு முக்காலே அரைமா முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமா.

இதன்வழிவரும் நெல் : 1000 கலம்.

22. கந்தணம்புத்தூர்

மொத்த நிலம்

எண்பத்துநாலே ஒன்பதுமா முந்திரிகைக் கீழ் முக்காலே ஒருமாவரையின் கீழ் அறுமாவரை .

நீங்கு நிலம்

ஒன்றேய் ஆறுமாவரை.
(ஊரிருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம், ஊருணிகுளம் சுடுகாடு கண்மாஞ்சேரி, பறைச்சேரி)

மீதி விளைநிலம்

எண்பத்து மூன்றே யிருமாவரை முந்திரிகைக்கீழ் முக்காலே இருமாவரையின் கீழ் ஆறுமாவரை.

இதன்வழிவரும் நெல் : 5000 கலம்.

எண்பத்துமூன்றே இருமாவரை முந்திரிகைக்கீழ் முக்காலே இருமாவரையின் கீழ் ஆறுமாவரை.

இதன்வழிவரும் நெல்: 5000 கலம்.

23. பூபாலசேகர நல்லூர்

மொத்த நிலம்

ஐம்பத்தாறரையே நாலுமா முந்திரிகைக் கீழரையே இருமாவரை அரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

நீங்கு நிலம்

மூன்றே எழுமா முந்திரிகைக் கீழ் ஒன்பதுமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமா.

(ஊரிருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம், திருநந்தவனம், ஆநிரைகள் நிற்றற்குரிய பாழ்நிலம், பறைச்சேரி, சுடுகாடு)

மீதிவிளை நிலம்

ஐம்பத்து மூன்றே எழுமாவரைக் கீழ் இரண்டுமா முக்காணி அரைக்காணிக்கீழ் எட்டுமா.

இதன்வழிவரும் நெல்: 2880 கலம்.

24. எயினங்குடி

மொத்த நிலம்

முப்பத்தேழே அறுமாவின் கீழ் நாலுமாக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

நீங்குநிலம்

ஒன்றே அரைமாவரைக்காணிக் கீழ் எட்டுமாக்காணிக்கீழ் முக்காலே ஒருமீ. (ஊர் இருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம், திருநந்தவனங்கள், குளங்கள், குளம் (அரசி வெட்டுவித்தது), சுடுகாடு)

ஒருமா

(இவ்வூரின் நிலத்தின் நடுவே குறுக்கிடும் கொண்டல்வாய் நீரோடு காலில் அடங்கியது.)

மீதிவிளை நிலம்

முப்பத்தாறே நாலுமாக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே ஒரு மாவின் கீழ் எட்டுமா.

இதன்வழிவரும் நெல்: 1887 கலனே தூணி உரி.

25. அன்னியூர் (ஏகபோகம் நீக்கி வெள்ளான் வகை)

மொத்த நிலம்

மூன்றே மூன்றுமா அரைக்காணிக்கீழ் அரையே மூன்று மாவரைக்காணிக் கீழ் எட்டுமா.

நீங்கு நிலம்

அரைக்காணி முந்திரிகைக் கீழ் மும்மாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.
(ஊர் நத்தம்)

மீதி விளைநிலம்

மூன்றே இரண்டுமா முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

இதன்வழிவரும் நெல்: 240 கலம்.

26. திருப்பாலைக்குடி

மொத்த நிலம்

அறுபத்துமூன்றே ஏழு மாக்காணி அரைக்காணிக்கீழ் ஆறுமாவரை.

நீங்குநிலம்

முக்காலே நாலுமாக்காணி.
(ஊர் இருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம், திருநந்தவனம், சுடுகாடு, பறைச்சேரி)

ஆறுமா

(இவ்வூர் நிலத்தின் நடுவே குறுக்கிடும் பழவாற்று நீரோடுகாலில் அடங்கியது.)

மீதிவிளை நிலம்

அறுபத்திரண்டே இரண்டு மாவரைக்காணிக்கீழ் நான்மாவரை.

இதன்வழிவரும் நெல் : 2500 கலம்.

27. பூதிகுடி

மொத்த நிலம்

பதினைந்தே நாலுமாக்காணிக்கீழ் ஆறுமாக்காணி.

நீங்குநிலம்

நாலுமாவின் கீழ் ஒன்பதுமாவரை முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமா.
(ஊரிருக்கை,பறைச்சேரி, குளம்)

மீதிவிளை நிலம்

பதினஞ்சே அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே ஒரு மாவரையரைக்காணிக் கீழ் எட்டுமா.

இதன்வழிவரும் நெல் : 800 கலம்.

28. உழுத்துக்குப்பையான மஹிமாபரண மங்கலம் (திருவிந்தளூர் நாட்டுப் பிரம்மதேயம்)

மொத்த நிலம்

முப்பத்தைந்தரையே மாக்காணிக் கீழரையே மாக்காணிக்கீழ் மூன்று மாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

நீங்கு நிலம்

ஒன்றரையே மூன்றுமாவின் கீழ் முக்காலே இருமாவரை முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மா.
(ஊர் இருக்கை, மஹாதேவர் ஸ்ரீகோயில், குளம், பறைச்சேரி)
ஆறுமாவரை
(இவ்வூரின் நிலத்தின் நடுவே குறுக்கிடும் முள்ளிவாய்க்காலில் அடங்கியது.)

மீதி விளைநிலம்

முப்பத்து மூன்றரையே இரண்டுமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே மும்மாவரைக்காணிக் கீழரையே ஒருமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

இதன்வழிவரும் நெல் : 1800 கலம்.

29. மணிகங்கை

மொத்த நிலம்

பதினைந்தே ஆறுமா முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் எட்டுமாவரைக் காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

நீங்குநிலம்

ஒன்றரையே அரைக்காணி முந்திரிகைக்கீழ் எழுமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

(ஊரிருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம், திருநந்தவனங்கள், ஊருணி, குளம், சுடுகாடு)

ஏழுமாவரையே ஐம்பத்து மூன்றே ஒன்பது மாவரையரைக்காணிக் கீழ் ஒருமா.

(இவ்வூரின் நிலத்தின் நடுவே குறுக்கிடும் கீழ்நாட்டுக்கு நீர்பாயும் வாய்க்கால் தறிச்சன்வாயில் அடங்கியது.)

இதன்வழிவரும் நெல் : 900 கலம்.

30. இராஜாஸ்ரய மங்கலம்[1]

மொத்த நிலம்

நூற்றொருபத்தேழே நாலு மாவரைக்காணிக் கீழ் இருமாவரை முந்திரிகைக்கீழ் அரையே இரண்டுமா.

நீங்கு நிலம்

மூன்றே எட்டுமா முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே ஒருமா.

(ஊரிருக்கை, ஸ்ரீகோயில்கள், திருமுற்றங்கள், திருநந்தவனங்கள், ஊருணி, குளம், கன்றுநிலைபாழ், கண்மாளச்சேரி, பறைச்சேரி, சுடுகாடு)

ஒன்றே இரண்டுமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமா

(இவ்வூரின் நிலத்தின் நடுவே குறுக்கிடும் நாங்கூர் உள்ளிட்ட ஊர்களுக்கு நீர்பாயும் நாட்டுவாய்க்காலில் அடங்கியது.)

மீதி விளைநிலம்

நூற்றொருபத்து மூன்றே ஏழுமாக்காணி முந்திரிகைக்கீழ் அரையே அரைமா முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மா.

இதன்வழிவரும் நெல் : 6000 கலம்.

---

1. மேற்குறித்த எண்: 28, 29, 30 ஆகிய ஊர்களில் நடந்த நிலப்பரிமாற்றம் இந்தஊருடன் சேர்த்து முன்னர் மணிகங்கைத் தேவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது போன்ற தகவல்களுடன், இம்மூன்று ஊர்களும் சேனிட்டூர் என்ற பெயரில் அழைக்கப்பட்டதாகச் சமஸ்கிருதப் பகுதி மூலம் தெரியவருகிறது.

(மேற்படி ஊர் முதலில் திருவிந்தளூர் நாட்டு நீடூர் நிலவினார் தளிக்குத் தேவதானமாக இருந்தது. அவ்வூர் தலைமாறாகப் பெறப்பட்டு, கங்கைகொண்ட சோழ ஈஸ்வரமுடையார்க்குத் தேவதானமாக மாற்றப்பட்டது. இதனை முறைப்படுத்திய புரவுவரித்திணைக்கள நாயகர் இருவரும், முகவெட்டி ஒருவரும் குறிக்கப்படுகின்றனர்.)

31. விட்டிலூர்

மொத்த நிலம்

தொண்ணூறே இரண்டுமா முக்காணி அரைக்காணிக்கீழ் முக்காலே மாகாணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

நீங்கு நிலம்

நாலரையே முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மா.

(ஊரிருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றங்கள், சுடுகாடு)

இருமாவரை அரைக்காணிக்கீழ் முக்காலே மூன்றுமா

(இவ்வூரின் நிலத்தின் நடுவே குறுக்கிடும் நாட்டார் வாய்க்காலில் அடங்கியது.)

மீதி விளைநிலம்

ஐம்பத்தைந்தே ஒன்பது மாக்காணிக்கீழ் அரையே இரண்டு மாகாணி முந்திரிகைக்கீழ் அரையே இரண்டு மா.

இதன்வழிவரும் நெல்: 5000 கலம்.

32. அழகிய சோழநல்லூர் (வைப்பூர் + திருவிந்தளூர்)

மொத்த நிலம்

பத்தொன்பதரையே நான்மாவரை முந்திரிகைக்கீழ் எழுமாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டுமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

நீங்குநிலம்

அரையே மூன்றுமா வரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே காணி அரைக்காணிக்கீழ் எட்டுமா.

(ஊரிருக்கை, ஊருணி, குளம், பிடாரிகோயில், சுடுகாடு, பறைச்சேரி)

மீதி நிலம் (விளைநிலம்)

பத்தொன்பதே மாகாணி முந்திரிகைக்கீழ் முக்காணி இரண்டு மாவின் கீழரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா.

இதன்வழிவரும் நெல் : 900 கலம்.

வைப்பூர் நீங்கல் நீக்கின நிலத்தில் தெற்கடைய நிலம் 21 வேலி

இதன்வழிவரும் நெல் : 1230 கலன் எழுகுறுணி நானாழி.

(திருவிந்தளூர் நீங்கல் நீக்கின நிலத்தில் நிலம் நாற்பத்தாறே எண்மாவரை யரைக்காணி முந்திரிகை (மூன்று வகையில் சபையார் நிலம்)

இதன்வழிவரும் நெல் : 723 கலனே இருதூணிக் குறுணி நானாழி.)

அழகிய சோழநல்லூர் உருவாக்கம்:

இரண்டாம் இராஜேந்திரனின் ஆறாம் ஆட்சியாண்டின் 210-ஆம் நாளன்று கங்கை கொண்ட சோழபுரத்து அரண்மனையில் குளிக்குமிடத்துத் தானம் செய்யப்பட்ட அழகிய சோழநல்லூர் பின்வரும் வகையில் உருவாக்கப்பட்டது.

1. வைப்பூரில் நீங்கல் நீங்கலுக்குப் பின்னுள்ள நிலம்

   (இதன் வழி வந்த நெல் 1230 கலனே எழு குறுணி நாநாழி;

   இவ்வூரும், இந்நிலமும் முன்காணியுடையாரை மாற்றிக் குடிநீக்கிக் காராண்மை, மீயாட்சி, மிகுதிகுறைமை உள்ளடங்க

   வெள்ளாண் வகையிலிருந்து யாண்டு 5-ஆவது முதல் தவிர்க்கப்பட்டது.)

+

2. திருவிந்தளூர் சபையார் பக்கல், ராஜேந்திரச் சதுர்வேதிமங்கலத்து சபையார் விலைகொண்ட நீங்கல் நீக்கின நிலம் நாற்பத்துநாலே முக்காலே இரண்டுமா முக்காணி அரைக்காணி முந்திரிகை

+

3. திருவிந்தளூர் சபையார் நிலமாய் இவ்வூர் பள்ளிகொண்டருளின தேவர் அனுபவிக்கிற நிலத்தில் ராஜேந்திரச்சதுர்வேதி மங்லத்து சபையார் நிலப்பரிவர்த்தனை செய்து கொண்டநிலம் வேலி

+

4. திருவிந்தளூர் சபையார் நிலமாய் இவ்வூர்த்திருத்தான் தோன்றீஸ்வரமுடைய மகாதேவர் அனுபவிக்கிற நிலத்தில் ராஜேந்திரச் சதுர்வேதி மங்லத்து சபையார் பரிவர்த்தனை செய்து கொண்டநிலம்

அரையே முக்காணி

ஆகத் திருவிந்தளூர் நிலத்தில் உள்ள நிலம் மொத்தம் நாற்பத்தாறே எண்மாவரையரைக்காணி முந்திரிகை

இதன்வழி நெல்

723 கலன் 2 தூணிக் குறுணி நானாழி

சபையார்க்குப் பிரம்மதேயமாய் இருந்த இவையும் யாண்டு 5முதல் வெவ்வெறு முதல் தவிர்ந்து ஒரூராய் அழகிய சோழ நல்லூராக்கப்பட்டது.

7. இரண்டாம் இராஜேந்திரன் அளித்த கொடையை செயற்படுத்திய அதிகாரிகள்

வாய்மொழியால் அரசனிட்ட ஆணை, எழுத்துவடிவம் பெற்று, அரண்மனையிலும், நாட்டார் வரிப்பொத்தகத்திலும் இடம்பெற்று, அவ்வவ்வூர்களில், எல்லை தெரித்துக் கல்லுங்கள்ளியும் நாட்டி, அறவோலை செய்தது வரை அனைத்துக் கட்டங்களிலும் உடனிருந்து பணி செய்தவர்கள் பெயரும் பதவியும் இங்கும் நிர்வாக நடைமுறை வரிசையிலேயே கூறப்பட்டுள்ளன. அவை வருமாறு:

1. அரசன் கூறிய ஆணையை எழுதிய முதல் நிலை அரசு அதிகாரி

இராஜராஜப் பாண்டிநாட்டு ராஜேந்திரசோழ வளநாட்டு மிழலைக் கூற்றத்துப் பன்றியூர் உடையான் தேவன் அம்பலக் கூத்தனான அபிமான மேருப்பல்லவரையன்

2. ஓலை நாயகங்கள் - ஆணையினை ஒப்பிட்டு உரைப்படுத்தியோர்

1. உய்யக் கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தகச் சதுர்வேதிமங்கலத்து நாரக்கண் மாராயன் கங்கை கொண்ட சோழனான உத்தம சோழப் பிரம்ம மாராயன்
2. அருமொழி விக்கிரம சோழனான வாணாதிராஜன்
3. அரையன் கெருளவாஹனனான காலிங்கராஜன்
4. ஈஸ்வரந் ராஜாதிராஜனான திரிபுவன வல்லப வன்னாடுடையான்
5. திருச்சிற்றம்பலமுடையான் கங்கைகொண்ட சோழனான ராஜராஜப் பிரம்மமாராயன்

3. 'வரியிலிட்டுக் கொள்க' என்று சொல்லியோர்

1. நீலன்குடிதாங்கியான காடுவெட்டி
2. வீரபத்திரன் தில்லைவிடங்கனான வில்லவராஜன்

4. அ. உடன் கூட்டத்துக் கருமம் ஆராய்வார்

1. கோன் அழகிய பாண்டியனான ராஜராஜக் குமணராஜன்
2. ராஜேந்திரசோழ வளநாட்டுப் பனையூர் நாட்டு ஆனாங்கூர்க் கோனுமான கூத்தன் அரியேறான விக்கிரமசிங்க மூவேந்த வேளான்
3. உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டுப் பழையாறு கிழான் ஆமாத்தூர் சூற்றியான இரட்டபாடி கொண்ட சோழ மூவேந்த வேளான்
4. மோடன் நாராயணனான ராஜராஜக் கனகராஜன்
5. தாமன் சந்திரசேகரனான ராஜேந்திரக் களப்பாளராஜன்

6. அதிராஜராஜ வளநாட்டுப் பட்டினக் கூற்றத்துக் குற்றால முடையான் இடமலி மாதனான சளுக்கி குலகால மூவேந்த வேளான்
7. நித்த விநோத வளநாட்டுக் கிழார்க் கூற்றத்துப் புன்னை நல்லூருடையான் வைகினான் குப்பையான ஜகதற்பகண்ட மூவேந்த வேளான்
8. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து வீராவதாரக் கோட்டத்துத் தேரோடு பளூவூர் நாட்டு வயலைக்காவூர்க் கண்ணந்தை காவிதி கம்பன் சிவசரண சேகரனான ராஜாதிராஜ மூவேந்த வேளான்
9. அதிராஜராஜ வளநாட்டுத் திருவாரூர் கூற்றத்துச் செல்லுருடையான் மாதவன் சாத்தனான பாத்திவேந்திர பிரம்ம மாராயன்
10. இராஜாதிராஜ வளநாட்டுக் குறுக்கை நாட்டுப் பூபாலசேகர நல்லூருடையான் அரையன் கோயிலானான ராஜமஹேந்திர மூவேந்த வேளான்
11. குறுக்கை நாட்டுக் கொண்டலூருடையான் கூத்தாடி அத்தாணியான ஜநநாத மூவேந்த வேளான்
12. இராஜேந்திரசோழ வளநாட்டுத் திருமுனைப்பாடிக் கயற்பாக்கிழான் மாதேவன் பேரடிகளான ராஜவிக்கிரம மூவேந்த வேளான்
13. நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து நெடுஞ்சேரிக்குடையான் கோதண்டன் சந்திர சேகரனான கடக்கங் கொண்ட சோழ மூவேந்த வேளான்
14. ஜெயங்கொண்ட சோழ வளநாட்டுத் திருவெழுந்தூர் நாட்டுச் சிவபாத சேகர நல்லூருடையான் வேளான் திருநீலகண்டனான இருமடி சோழ மூவேந்த வேளான்
15. விஜைய ராஜேந்திர வளநாட்டுப் புலியூர் நாட்டுச் சிகாருடையான் சீராகவன் செந்தாமரைக் கண்ணனான நரலோகநாத மூவேந்த வேளான்
16. அருமொழிதேவ வளநாட்டு நெந்மலிநாட்டுச் சதுராங்குடையான் அரங்கன் கேசவன் மஹிமாலைய மூவேந்த வேளான்
17. அதிராஜராஜ வளநாட்டு மருகல் நாட்டு வைப்பூர் கிழவன் காளி வாசுதேவனான சோழகுலதுங்க மூவேந்த வேளான்

ஆ. நடுவிருக்கை அதிகாரிகள்

1. கலியாணபுரங்கொண்டசோழ வளநாட்டுத் தனியூர் ஸ்ரீராஜாதிராஜச் சதுர்வேதி மங்கலத்துப் பறியலூர் ஸ்ரீ வாசுதேவபட்ட வாஜபேய அக்னிசித்த சர்வத்து பௌண்டரிகயாஜி
2. கரிப்படறத்து ஸ்ரீமாதவ பட்டன்

3. இராஜாதிராஜ வளநாட்டுத் தனியூர் ஸ்ரீவீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்துப் பல்லவபுரத்து ராஜேந்திரசோழ பட்டன்
4. மேற்படிநாட்டு மண்ணிநாட்டுச் சோழமாத்தாண்டச் சதுர்வேதி மங்கலத்து அரணைப்புறத்து ராமதேவபட்டன்

இ. அரசத் திருமுகக் கருமம் ஆராய்வோர்

1. இராஜராஜப்பாண்டி நாட்டு மிழலைக் கூற்றத்துச் சோழ சிகாமணி நல்லூருடையான் குமரன் சிவசரணமான செம்பியன் அணுத்திர மூவேந்த வேளான்
2. இராஜராஜ வளநாட்டுப் பரவைச்சுற்றுப் பூண்டியூருடையான் அத்தாணிக் கூத்தனான செம்பியன் மூவேந்த வேளான்
3. இராஜராஜப் பாண்டிநாட்டு மிழலைக் கூற்றத்து ஸ்ரீபராந்தக நல்லூருடையான் பிடாரந் நக்கனான சோழசிகாமணி மூவேந்த வேளான்
4. நித்த விநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆலத்தூருடையான் திவாகரன் நின்றானான வானவன் மூவேந்த வேளான்
5. தஞ்சாவூர்க் கிழவன் அபராயிதன் அனந்தீசனான ராஜேந்திரசோழ மூவேந்த வேளான்
6. அருமொழிதேவ வளநாட்டுச் செற்றூர்க் கூற்றத்துக் கண்டியூருடையான் பிச்சன் தேவர்கண்டனான ராஜராஜ ஏனாதி அரையன்
7. விஜைய ராஜேந்திர வளநாட்டு ஆர்வலக் கூற்றத்துத் தெங்கூருடையான் பாக்கரன் பள்ளிகொண்டானான நிருப விச்சாதிர மூவேந்த வேளான்
8. இராஜராஜப் பாண்டிநாட்டு ராஜேந்திர சோழவளநாட்டு மிழலைக் கூற்றத்துப் பொன்பற்றியுடையான் கோன் அம்பலக் கூத்தனான ராஜ விச்சாதிர மூவேந்த வேளான்
9. இராஜாதிராஜ வளநாட்டுக் குறுக்கை நாட்டு ஜயங்கொண்ட சோழ நல்லூர்க் கிழவன் பாலைக் கூத்தனான வீரவிச்சாதிர மூவேந்த வேளான்
10. பாண்டி குலாசனி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பரிசைகிழான் நக்கன் மதுராந்தகனான ஆகவமல்ல குலாந்தக மூவேந்த வேளான்
11. இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டுப் பூவேந்திரசோழ நல்லூருடையான் கோவிந்தன் பூவனான சோழகுல மாணிக்க மூவேந்த வேளான்
12. நித்த வினோத வளநாட்டு முடிச்சோணாட்டு அரிதாயமங்கல முடையான் ஆதித்தன் தற்பரம்பொருளான மதுராந்தக மூவேந்த வேளான்
13. சஷித்திரிய சிகாமணி வளநாட்டு வேளாநாட்டுக் கீரங்குடையான் நக்கன் கோவிந்தனான ராஜமாத்தாண்ட மூவேந்த வேளான்

14. விஜைய ராஜேந்திர வளநாட்டு ஆர்வலக் கூற்றத்துச் சிற்றுறையூர்க் கிழவன் ராமன் திருநீலகண்டனான பஞ்சவன் மூவேந்த வேளான்
15. ஜெயங்கொண்ட சோழ வேதிவேளான்
16. செங்கேணிக் கிழான் நீலன் சோலையான மனுகுலசிகாமணி மூவேந்த வேளான்.
17. உதையங்குடையான் சோலை பட்டாலகனான அழகிய பாண்டிய மூவேந்த வேளான்.

நடுவிருக்கை அதிகாரிகள்

1. கலியாணபுரங்கொண்டசோழ வளநாட்டுத் தனியூர் ஸ்ரீராஜாதிராஜச் சதுர்வேதி மங்கலத்து உப்பம்பிரால்ச் சோலைப்பிரான் பட்டசோமயாஜி
2. ஆதனூர் தேவதேவேச பட்டன்
3. பேரெமபுறத்து ஸ்ரீகிருஷ்ண பட்டன்
4. குண்டூர் நாகேஸ்வரன் சூர்யதேவ பட்டரான பிரம்மப் பல்லவரையன்.

முதல்நிலையில் அரண்மனை வரிப்பொத்தகத்தில் எழுதி வரியிலிட்டவர்களின் பதவியும் பெயரும் வருமாறு:

1. புரவுவரித் திணைக்களத்துக் கண்காணி

உய்யக் கொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டுக் கடையக் குடையான் உதைய திவாகரன் பள்ளிகொண்டான்

2. புரவுவரித் திணைக்களம்

1. க்ஷத்திரியசிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டு உத்தம சோழ நல்லூருடையான் சுவரன் நாராயணனான மனுகுல கேசரி மூவேந்த வேளான்
2. விஜைய ராஜேந்திர வளநாட்டு வண்டாழை வேளூர்க் கூற்றத்துப் பெரியங்குடையான் தேவப் பிரானான கரிகாலசோழ மூவேந்த வேளான்
3. இராஜராஜ வளநாட்டுப் பரவைச்சுற்றுப் பூண்டியூருடையான் அத்தாணி சீயங்குரன் எதிரிலிசோழ மூவேந்த வேளான்
4. க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டுக் காட்டூருடையான் ஊரான் திகையொளியான தியாக சுந்தர மூவேந்த வேளான்
5. மேற்படிநாட்டுப் பனையூர் நாட்டுக் கூத்தனூர்க் கிழவன் சூற்றி இராமன்
6. உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு இளையான் குடையான் விதியன் மருதமாணிக்கம்
7. விஜைய ராஜேந்திர வளநாட்டு இடையள நாட்டு மணற்குடையான் பசுபதி அரங்கன்

3. மாளிகை முதலுக்குப் புரவுவரித் திணைக்களம்

நித்த விநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூருடையான் ஆவூர்க் கண்ணன்

4. வீசக்கணக்குப் புரவுவரி நாயகம்

ஜெயங்கொண்ட சோழ வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுக் கொமருடையான் வெண்காடன் பொற்காரியான பார்த்திவநாத மூவேந்த வேளான்

5. வரிப்பொத்தகம்

1. அதிராஜராஜ வளநாட்டு அளநாட்டு அத்திப் புலியூருடையான் மாதேவன் வெண்காடன்
2. உய்யக் கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுக் கீரனூருடையான் மருதன் ஆயக்கொழுந்து
3. விஜைய ராஜேந்திர வளநாட்டு இடையள நாட்டு முகத்தலை உடையான் மண்டை சங்கரன்
4. நெற்குப்பை உடையான் வத்தமானன் ஒலோகநாதன்

6. முகவெட்டி

1. பாண்டி குலாசனி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பெருமங்கலமுடையான் தேவன் ஐய்யாறன்
2. சஷித்திரிய சிகாமணி வளநாட்டு வேளாநாட்டுப் புன்கஞ்சேரி உடையான் சோமன் கேடிலி
3. நியமங்கிழான் சீராமன்
4. ஜயங்கொண்ட சோழ வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுச் சிற்றாமூருடையான் மருதன் அனந்தீசன்
5. அருமொழிதேவ வளநாட்டு இங்கண் நாட்டுக் கொற்றவாயில் உடையான் பட்டன் தேவன்
6. விஜையராஜேந்திர வளநாட்டுப் புலியூர் நாட்டு நாரணமங்கல முடையான் நானூற்றுவன் சூற்றி
7. பட்டணம் உடையான் சூற்றி கோயில்
8. கல்லியாணபுரங் கொண்ட சோழ வளநாட்டு முடிச்சோணாட்டுப் பூசங்குடையான் குட்டேறன் இராமன்

7. முதலுக்கு முகவெட்டி

இராஜராஜ வளநாட்டுப் பொ[ய்*]யிற் கூற்றத்துப் பூங்குளமுடையான் மதிசூதன் குடந்தைக் கிடந்தான்

8. வாசித்த கீழ் முகவெட்டி

விஜையராஜேந்திர வளநாட்டுப் புலியூர் நாட்டுக் கழனிவாயிலுடையான் பாளூர் முடிகொண்ட சோழன்

9. வரியிலீடு

1. உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு திருமிழலை உடையாந் தீரன் திருச்சிற்றம்பலம் உடையான்
2. ஜயங்கொண்ட சோழவளநாட்டுக் குறும்பூர் நாட்டுக் களக்குடையான் நக்கன் தேவன்

10. பட்டோலை

மேற்படிநாட்டுக் குறும்பூர் நாட்டுப் போதிமங்கலமுடையான் இருநூற்றுவன் ஒற்றி

8. அழகிய சோழநல்லூரை உருவாக்கி வரியிலிட்டபோது பணிசெய்த அதிகாரிகள்

1. அரச ஓலை எழுதுவான்

ராஜராஜப் பாண்டிநாட்டு ராஜேந்திரசோழ வளநாட்டு மிழலைக் கூற்றத்துப் பன்றியூர் உடையான் தேவன் அம்பலக் கூத்தனான அபிமான மேருப்பல்லவரையன்

2. அரச ஓலை நாயகம் - ஆணையினை ஒப்பிட்டு உரைப்படுத்தியோர்

1. அருமொழி விக்கிரம சோழனான வாணாதிராஜன்
2. அரையன் கெருள வாஹனனான காலிங்கராஜன்
3. ஈஸ்வரந் ராஜாதிராஜநாந திரிபுவந வல்லப வன்னாடுடையான்
4. திருச்சிற்றம்பலமுடையான் கங்கைகொண்ட சோழநாந ராஜராஜ பிரம்மமாராயன்
5. மாராயன் கங்கைகொண்ட சோழனான உத்தமசோழப் பிரம்மமாராயன்
6. ஆதித்தன் சந்திரசேகரனான சோழகோன்
7. சோழப்பல்லவரையன் சிற்றேரி நாராயணனான ராஜராஜச்சோழ பல்லவரையன்

3. 'வரியிலிட்டுக் கொள்க' என்று சொல்லியோர்

1. திருச்சிற்றம்பலமுடையான் கங்கைகொண்ட சோழனான ராஜராஜப் பிரம்ம மாராயன்

2. வீரபத்திரன் தில்லை விடங்கனான வில்லவராஜன்
3. விடையில் நீலன் குடிதாங்கியான காடுவெட்டி

4. உடன் கூட்டத்து அரசகருமம் ஆராய்வோர்

1. கோன் அழகிய பாண்டியனான ராஜராஜக் குமணராஜன்
2. தாமந் சந்திரசேகரனான ராஜேந்திரக் களப்பாளராஜன்
3. அதிராஜராஜ வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துச் செல்லூருடையான் மாதேவன் சாத்தனான பாத்திவேந்திர பிரம்ம மாராயன்
4. ராஜாதிராஜ வளநாட்டுக் குறுக்கை நாட்டுக் கொண்டலூருடையான் கூத்தாடி அத்தாணியான ஜநநாத மூவேந்த வேளான்
5. கோனுழான் கூத்தன் அரியேறான விக்கிரமசிங்க மூவேந்த வேளான்
6. உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டுப் பழையாறு கிழான் ஆமாத்தூர் சூற்றியான இரட்டபாடி கொண்ட சோழ மூவேந்த வேளான்
7. இராஜராஜப் பாண்டிநாட்டு ராஜேந்திர சோழவளநாட்டு கீழ்குண்டாற்றுச் சோழசிகாமணி நல்லூருடையான் குமரன் சிவசரணமான ராஜேந்திர மூவேந்த வேளான்
8. இராஜராஜ வளநாட்டுப் பரவைச்சுற்றுப் பூண்டியூருடையான் வேளான் கூத்தனான செம்பியன் மூவேந்த வேளான்
9. நித்தவிநோத வளநாட்டுக் கிழார்க் கூற்றத்துப் புன்னை நல்லூருடையான் வைகினான் குப்பைப்[ப*]டா[ர*]ன் ஜகதற்ப கண்ட மூவேந்த வேளான்
10. அதிராஜராஜ வளநாட்டு மருகல்நாட்டு வைப்பூர்க் கிழவன் காளி வாசுதேவனான சோழகுலதுங்க மூவேந்த வேளான்
11. கூத்தனூருடையான் விளக்கனாரூரான ஜெயங்கொண்ட சோழத் தமிழதரயன்
12. இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டுக் கஞ்சாறன் சத்தி திருவடிகளான உத்தமசோழத் திருவிந்தளூர் நாட்டு மூவேந்த வேளான்
13. உய்யக்கொண்டார் வளநாட்டுப் பாம்பூர்நாட்டுக் கடையக் குடையான் உதைய திவாகரன் பள்ளிகொண்டானான மஹிபாலகுலகால மூவேந்த வேளான்
14. மொட நாராயணனான ராஜராஜக் கனகராஜன்

5. நடுவிருக்கை

1. ஜெயங்கொண்ட சோழ வளநாட்டுத் திருவெழுந்தூர் நாட்டு விஜயராஜேந்திரச் சதுர்வேதி மங்கலத்துக் கரிப்புறத்து ஸ்ரீமாதவ பட்டன்

2. இராஜாதிராஜ வளநாட்டு மண்ணிநாட்டுச் சோழமாத்தாண்டச் சதுர்வேதி மங்கலத்து அரணைப்புறத்து ராமதேவபட்டன்
3. இராஜேந்திரப் பிரம்மாதிராஜன்
4. குறப்பில் தருணேந்து சேகரபட்டன்
5. க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு வேளாநாட்டு ராஜேந்திரசோழச் சதுர்வேதி மங்கலத்துக் குண்டூர் நாஹேஸ்வரன் சூர்யதேவபட்டன்
6. பிரம்மப் பல்லவரையன்

6. அரசத் திருமுகக் கருமம் ஆராய்வோர்

1. க்ஷத்திய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டு ஸ்ரீபராந்தக நல்லூருடையான் பிடாரநக்கனான சோழசிகாமணி மூவேந்த வேளான்
2. தஞ்சாவூர்க் கிழவன் அபராயிதன் அனந்தீசனான ராஜேந்திரசோழ மூவேந்த வேளான்
3. சிவபாத சேகர நல்லூருடையான் வேளான் திருநீலகண்டனான இருமடிசோழ மூவேந்த வேளான்
4. அதிராஜராஜ வளநாட்டு மருகல்நாட்டுக் கருப்பூருடையான் ஆரூர் பழிப்பிலியான உத்தமசோழ மூவேந்த வேளான்
5. கல்லியாணபுரங்கொண்ட சோழ வளநாட்டு முடிச்சோணாட்டு அரிதாயமங்கலமுடையான் ஆதித்தன் தற்பரம்பொருளான மதுராந்தக மூவேந்த வேளான்
6. விஜைய ராஜேந்திர வளநாட்டு ஆர்வலக் கூற்றத்துத் தெங்கூருடையான் பாசுரன் பள்ளிகொண்டானான நிருப விச்சாதிர மூவேந்த வேளான்
7. மங்கலங்கிழான் பெருமானரங்கனான நிருபதிவாகர மூவேந்த வேளான்.
8. ஜெயங்கொண்ட சோழ வளநாட்டு விளைநாட்டு அரசூருடையான் அறிவாளன் கயிலாயமான அதிராஜேந்திர மூவேந்தவேளான்
9. இராஜாதிராஜ வளநாட்டுக் குறுக்கை நாட்டுப் பூபாலசேகர நல்லூருடையான் அரயன் கோயிலானான ராஜமஹேந்திர மூவேந்த வேளான்
10. அருமொழிதேவ வளநாட்டுப் புறங்கரம்பை நாட்டு மகன்றைக் காவுடையான் தேவன் காறாயிலான கடாரங்கொண்ட சோழ மூவேந்த வேளான்
11. விஜையராஜேந்திர வளநாட்டு இடையளநாட்டுக் குன்றலூர்க் கிழவன் குணப்பெருமான் ஆதித்தனான இராஜராஜ அணுத்திரப்பல்லவரையன்
12. ஜெயங்கொண்ட சோழ வளநாட்டு விளைநாட்டு அரும்புச்சேரி உடையான் அம்பலத்தாடி சோலையான மீனவன் மூவேந்த வேளான்

13. ஜெயங்கொண்ட சோழ வளநாட்டுக் குறும்பூர் நாட்டுக் கூற்றூர்க் கிழவன் நாயனாடவலானான உலகளந்த சோழ மூவேந்த வேளான்
14. இராஜராஜப் பாண்டிநாட்டு ராஜேந்திர சோழ வளநாட்டு மிழலைக் கூற்றத்துப் பொன்பற்றியுடையான் கோன் அம்பலக் கூத்தனான ராஜ விச்சாதிர மூவேந்த வேளான்
15. சத்துரு பயங்கர நல்லூருடையான் எழுவன் ஈஸ்வரனான உதைய மார்த்தாண்ட மூவேந்த வேளான்

7. நடுவிருக்கை

1. ஜயங்கொண்டசோழ வளநாட்டுத் திருவெழுந்தூர் நாட்டு விஜைய ராஜேந்திரச் சதுர்வேதி மங்கலத்துப் பறியலூர் வாசுதேவ பட்ட ஸோமயாஜி
2. இராஜேந்திரசிங்க வளநாட்டு இன்னம்பர் நாட்டு ஸ்ரீபராந்தகச் சதுர்வேதி மங்கலத்து ஆதனூர் தேவதேவேந்திர பட்ட சோமயாஜி
3. சஷித்திரியசிகாமணி வளநாட்டு வேளாநாட்டு ராஜேந்திர சோழச் சதுர்வேதி மங்கலத்து ஸாபணை அதிராத்ரயாஜி

8. புரவுவரித் திணைக்களத்துக் கண்காணி

1. ஜயங்கொண்டசோழ வளநாட்டு விளைநாட்டு அருமுனை கிழான் நரபீமன் அரிமல்லனான அபிமான மேரு மூவேந்த வேளான்
2. அருமொழிதேவ வளநாட்டு நென்மலிநாட்டு அன்னிகுடி உடையான் திருமால் சீராளனான சோழ கேரள மூவேந்த வேளான் ஆர்க்காடு கிழவன் நீடூர்க் கணபுரமான அபிமானதுங்க மூவேந்த வேளான்
3. ஜெயங்கொண்ட சோழவளநாட்டுத் திருவெழுந்தூர் நாட்டுக் கொற்றமங்கலமுடையான் மாதேவன் தளிக்குளவனான அழகிய ராஜ பிரம்மமாராயன்
4. விஜையராஜேந்திர வளநாட்டு இடையளநாட்டு மணற்குடையான் நாராயண பசுபதி
5. இராஜாஸ்ரய வளநாட்டுக் கீழ்பலாற்று மருதூருடையான் அரங்கன் மோடன்
6. அள்ளூருடையான் கேசவந் அரங்கனான சோழமாணிக்க மூவேந்த வேளான்

9. புரவுவரித் திணைக்களம்

1. சஷித்திரியசிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டு உத்தம சோழ நல்லூருடையான் சுவரன் நாராயணனான மனுகுல கேசரி மூவேந்த வேளான்

2. விஜைய ராஜேந்திர வளநாட்டு வண்டாழை வேளூர்க் கூற்றத்துப் பெரியங்குடியூடையான் தேவன் பிடாரனான கரிகாலசோழ மூவேந்த வேளான்
3. இராஜராஜ வளநாட்டுப் பரவைச்சுற்றுப் பூண்டியூருடையான் வேளான் சீயாரூரான எதிரிலிசோழ மூவேந்த வேளான்
4. உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு இளையான் குடையான் வீதியன் மருதமாணிக்கமான சோழேந்திர சிங்க மூவேந்த வேளான்
5. ஜெயங்கொண்ட சோழவளநாட்டு விளைநாட்டு அரசூருடையான் பசிதாங்கி தத்தன்
6. நியமங்கிழான் கூத்தன் இராமனான பராக்கிரமசோழ மூவேந்த வேளான்
7. க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டுக் காட்டூருடையான் ஊரான் திகையொளியான தியாக சுந்தர மூவேந்த வேளான்
8. பாண்டிகுலாசநி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பெருமங்கல முடையான் தேவன் ஐய்யாறனான சோழ விச்சாதிர மூவேந்த வேளான்

10. மாளிகை முதலுக்குப் புரவுவரித் திணைக்களம்

க்ஷத்திரிய சிகாமணிவளநாட்டு வேளாநாட்டுப் பூங்குளமுடையான் மதிசூதன் குடந்தைக் கிடந்தான்.

11. வீசக்கணக்குப் புரவுவரி நாயகம்

ஜெயங்கொண்ட சோழ வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுக் கருப்பூருடையான் ஊரான் சூற்றியான வளவவிச்சாதிர மூவேந்த வேளான்

12. வரிப்பொத்தகம்

1. உய்யக் கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுக் கீரனூருடையான் மருதன் ஆயர்கொழுந்து
2. அதிராஜராஜ வளநாட்டு அளநாட்டு அத்திப் புலியூருடையான் மாதவன் வெண்காடன்
3. விஜையராஜேந்திர வளநாட்டு இடையள நாட்டு முகத்தலை உடையான் மண்டை சங்கரன்
4. ஜெயங்கொண்டசோழ வளநாட்டுத் திருவெழுந்தூர் நாட்டு ஜயங்கொண்ட சோழ நல்லூருடையான் சேந்தனூருடையான் அவநிப்பிரதாப மூவேந்த வேளான்

13. முகவெட்டி

1. சஷித்திரிய சிகாமணி வளநாட்டு வேளாநாட்டுப் புன்கஞ்சேரி உடையான் சோமன் கேடிலி
2. விஜையராஜேந்திர வளநாட்டுப் புலியூர் நாட்டு நாரணமங்கல முடையான் நானூற்றுவன் சூற்றி
3. அருமொழிதேவ வளநாட்டு இங்கண் நாட்டுக் கொற்றவாயில் உடையான் பட்டன் தேவன்
4. ஜெயங்கொண்ட சோழ வளநாட்டுத் திருவெழுந்தூர் நாட்டுச் சிற்றாமூருடையான் மருதன் அனந்தீசன்
5. கல்லியாணபுரங் கொண்ட சோழவளநாட்டு முடிச்சோணாட்டுப் பூசங்குடையான் குட்டேறன் இராமனான திருத்தாண்ட மூவேந்த வேளான்
6. விஜைய ராஜேந்திர வளநாட்டு வண்டாழை வேளூர்க் கூற்றத்து ஊரங்குடையான் தேவன் சோதி
7. விசையங்குடையான் உதைய பாசுரன் ராஜேந்திரசோழன்
8. ஜெயங்கொண்ட சோழவளநாட்டு முழையூர் நாட்டுக் குத்தமங்கல முடையான் சீராளந் அமுதன்

14. முதலுக்கு முகவெட்டி

வல்லமுடையான் புறம்பயன் ஆச்சபிடாரன்

15. வாசித்த வரிப்பொத்தகம்

விஜையராஜேந்திர வளநாட்டு இடையளநாட்டு முகத்தலையுடையான் மண்டை சங்கரன்

16. வரியிலீடு முகவெட்டி

கலியாணபுரங்கொண்ட சோழவளநாட்டு முடிச்சோணாட்டு பூசங்குடையான் குட்டேறன் இராமனான நிருபமாத்தாண்ட மூவேந்த வேளான்

17. படை எழுதகை முப்பெருந்தரம்

இராஜராஜப் பாண்டிநாட்டு ராஜேந்திரசோழ வளநாட்டு முத்தூற்றுக் கூற்றத்து அரசத்தூருடையான் சூற்றி கற்பகம்.

மேற்குறித்த 32 ஊர்களையும், அவ்வவ் ஊர்களுக்குச் சென்று அளந்து பிடிசூழ்ந்து பிடாகை நடப்பித்து எல்லையிட்டு அறவோலை செய்யுமாறு அரசனால் பணிக்கப்பட்ட அதிகாரிகள் வருமாறு:

18. கண்காணி

நடுவிருக்கை சிறுநாலூர் பிரம்மாத்ம பட்டன்

19. பட்டர்கள்

வங்கிபுறத்துத் தோணபட்டன்,

இடையாற்றுக்குடிப் பூவத்த பட்டன்

20. புரவுவரித் திணைக்களம்

எதிரிலி சோழ மூவேந்த வேளான்.

அரசன் அனுப்பிய அதிகாரிகளுடன் சேர்ந்து திருமந்திர ஓலை, ...த்திரதன் கையெழுத்திட்டுக் கொடுக்க எல்லை தெரித்துக்காட்டிப் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங்கள்ளியும் நாட்டி அறவோலை செய்து கொடுத்த போது உடனிருந்து சான்றோப்பமிட்டோர் வருமாறு:

9. அறவோலை செய்யுமிடத்து உடனிருந்து சான்றொப்பமிட்டவர்கள்

திருவிந்தளூர் நாட்டு நாட்டார், குறுக்கை நாட்டார்

புரவுவரித் திணைக்கள முகவெட்டி

இராஜராஜ வளநாட்டுப் பரவைச் சுற்றுப் பூண்டியுடையான் அத்தாணி சீயாரூரான எதிரிலி சோழ மூவேந்த வேளான்.

கண்காணி

இராஜராஜப் பாண்டிநாட்டு ராஜேந்திர சோழவளநாட்டு மிழலைக் கூற்றத்து நடுவிற்கூற்று நடுவிருக்கை சிறுநாலூர் சக்ரபாணி பிரம்மாத்ம பட்டன்.

பட்டர்கள்

1. அதிராஜராஜ வளநாட்டு முழையூர் நாட்டு அருமொழிதேவச் சதுர்வேதி மங்கலத்து வங்கிப்புறத்து பிரானம்பி பட்டன்.
2. விஜயராஜேந்திர வளநாட்டு அளநாட்டுக் கீழெயிலான கங்காவல்லபச் சதுர்வேதி மங்கலத்து இடையாற்றுக்குடிப் பிரான் பிரபுதத்த பட்டன்.
3. வேங்கடவன் மாதவடிகள்

பிறர் :

திருவிந்தளூர் நாட்டுக் கடுவங்குடையான் சிங்கன் ஐய்யாறன்
மேற்படிநாட்டுப் பனம்பள்ளி உடையான் கண்ணன் நாராயணன்

மேற்படி நாட்டு மணிக்குடையான் காரிநாராயணன்
திருவிந்தளூர்ச் சபையார்
மேற்படியூர் சாலங்காயன் சர்வதேவன் இனையான்.
அழுதன் சாயன் வடுகன் கண்ணன்
அழுதன் சாயன் அரைய . . .றைவன்
திருவிந்தளூர் மத்யஸ்தன் சிங்கன் வெண்காடன்
உத்தமசோழச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார்
மேற்படியூர் மத்யஸ்தன் சவையான் நாராயணன்
பண்டிதச் சோழச் சதுர்வேதிமங்கலத்து சபையார்
மேற்படியூர் பிராமணன் சாவாந்தி சிவன் நாராயண பட்டன்
மேற்படியூர் பிராமணன் காப்பியன் வேங்கடவன் கேசவன்
திருவிந்தளூர் நாட்டு சோளேந்திரசிங்க நல்லூருடைய சோலை ராஜராஜன்
மேற்படிநாட்டுப் புதுக்குடி ஊரார்
மேற்படியூர் வெள்ளாளன் கஞ்சாறன் வெண்காடன் ஆடவலானான
ராஜேந்திரசோழத் திருவிந்தளூர் நாட்டு மூவேந்த வேளான்.
குறுக்கைநாட்டு உதையங்குடையான் ஆதித்த நாராயணன்
மேற்படிநாட்டு கொண்டலுடையான் வாகை அரன்
மேற்படிநாட்டு அம்பருடையான் சீவகன் குடிதாங்கி
மேற்படிநாட்டு பனையூருடையான் வேளான் அரசான குறுக்கைநாட்டு வேளான்
மேற்படிநாட்டு உத்தமசோழத் திருமங்கலத்து ஊரார்
மேற்படியூர் மத்யஸ்தன் இராயன் அழுதடிகள்
குறுக்கைநாட்டுக் கொண்டலூர் ஊரார்
மேற்படியூர் வெள்ளாளன் கொண்டலூருடையான் கண்டன் சங்கரன்
திருவிந்தளூர் நாட்டு ஆலவேலிச் சபையார்
மேற்படியூர்ப் பிராமணன் பாரதாயன் தாயன் திருமங்கை வேந்தன்
திருவிந்தளூர் நாட்டு மேலாதனூர்ப்பால் கணிமுற்றூட்டு வெள்ளாளன்
பெரும்பொழுதுடையான் அடிகள் சந்திரசூளாமணி
மேற்படி நாட்டு முழையூர் ஊரார்
மேற்படியூர் வெள்ளாளன் முழையூருடையான் அடிகள் தாமன்
மேற்படியூர் வெள்ளாளன் நெற்குப்பையுடையான் சாத்ததறிச்சன்
மேற்படி நாட்டுப் புல்லூர் ஊரார்
மேற்படியூர் வெள்ளாளன் மலைக்குடையான் பெருமான்தாழி

குறுக்கைநாட்டு விக்கிரமசோழச் சதுர்வேதிமங்கலத்து சபையார்
மேற்படியூர் சிவப்பிராமணன் நீலன் கணபதி பட்டன்
மேற்படிநாட்டு ராஜராஜநல்லூர் ஊரார்
மேற்படியூர் வெள்ளாளன் நள்ளாற்றூருடையான் தேவன் அடிகள்
மேற்படி நாட்டுப் பிரம்மதேயம் தக்கடூர் சபையார்
மேற்படியூர் பாரத்வாஜி நாராயணன் திரியம்பகன்
மேற்படிநாட்டு எழிநலக்குடிச்சபையார்
மேற்படியூர் பிராமணன் கௌசிகன் சந்திரசேகரன் அடிகள்
மணிகங்கை தாயன் ஈஸ்வரமுடையார் ஸ்ரீகோயிலுடைய கௌதமன் கண்ணிப்
பவழக்குன்று
குறுக்கைநாட்டுப் பிரம்மதேயம் அன்னியூர்ச் சபையார்
மேற்படியூர் மத்யஸ்தன் சுவரன் ஸ்ரீகண்டன்
திருவிந்தளூர் நாட்டுச் சோழவிச்சாதிரபுரத்து நகரத்தார்
மேற்படியூர் மத்யஸ்தன் வேம்படிகள் ஏகவீரன்
மேற்படியூர் வியாபாரி பொதுவன் பட்டாலகன்
மேற்படிநாட்டுச் சிறுபுத்தூர் ஊரார்
மேற்படியூர் வெள்ளாளன் சிறுகுடையான் ஆச்சன் சிங்கன்
மேற்படிநாட்டுப் பிரம்மதேயம் இடையரி ஆற்றுக்குடிச் சபையார்
மேற்படியூர் பிராமணன் காஸ்யபன் ஸ்ரீகிருஷ்ணன் தாயன்
மேற்படிநாட்டு மருதமங்கலத்துக் குளிர்கோயில் ஈஸ்வரமுடையார் கோயில்
சிவப்பிராமணன் புத்தன் நாதன்
செம்பால் கடம்பங்குடி ஊரார்
மேற்படியூர் வெள்ளாளன் கஞ்சாறன் பட்டன் பதின்னன்
செற்றூர் செம்பங்குடி ஊரார்
மேற்படியூர் வெள்ளாளன் தலைநாடுடையான் வேளான் பொற்பட்டன்
மேற்படி நாட்டு அழகியசோழச் சதுர்வேதி மங்கலத்து சபையார்
மேற்படியூர்க் கடிகை மத்யஸ்தன் ஒற்றியூர்ப் பவழக்குன்றான மகாஜனப்பிரியன்
கஞ்சாற்று ஊரார்
மேற்படியூர் வெள்ளாளன் கஞ்சாறன் வீரன் ஆதித்தன்
நாங்கூர் நாட்டுக் கிடாரங்கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார்
மேற்படியூர் மத்யஸ்தன் உலகமுண்டான் ஆயர்கொழுந்து

மேற்படிநாட்டு நாங்கூர்ச் சபையார்
மேற்படியூர் மத்யஸ்தன் வெண்காடன் உடையான் ஆன நாலாயிரப்
பெருங்காவிதி
மேற்படிநாட்டுக் குந்தவைச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார்
மேற்படியூர்க் கடிகை மத்யஸ்தன் எழுபத்தைவன்
மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார்
மேற்படியூர் மத்யஸ்தன் நாராயணன் கருணாகரப்பிரியன்.

10. நிலவகைகள்

நான்கெல்லைக்குட்பட்ட நிலங்கள் கீழ்வரும் வகையில் வகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன

நீர் நிலம், புன்செய், ஊரிருக்கை, கோயில், திருமுற்றம், திருந்தவனம், பறைச்சேரி, கண்மாளச்சேரி, சுடுகாடு, மனை, மனைப்படப்பை, கடை, கடைத்தெரு, மன்று, கன்று மேய்பாழ், குளம், கொட்டகம், கிடங்கு, கேணி, புற்று, தெற்றி, காடு, பீடிலிகை, களர், உவர், ஆறு, ஆறிடு படுகை, ஓடை உடைப்பு, மீன்பயில் பள்ளம், தேன் பயில் பொதும்பு, மேநோக்கிய மரம் கீணோக்கிய கிணறு, நீர்பூசி நெடும்பரம்பெறிந்து உடும்போடி ஆமை தவழ்ந்த எவ்வகைப்பட்ட பிறநிலங்கள்.

11. பிரம்மதேயமாக நிலம் பெற்றதால் பெற்ற உரிமைகளும், வரிவருமானங்களும்

சோழகுல நாராயணச் சதுர்வேதி மங்கலமென்னும் திருநாமத்தால் பிரமதேய இறையிலியாகப் பெற்ற போதும், பின்னர் அகர பிரமதேயம் ராஜேந்திர சருப்பேதிமங்கலம் என்ற பெயரில் மாற்றம் செய்யப்பட்ட போதும் பயன்பெறுவோர் பெற்ற விவஸ்த்தைகள் (தீர்மானத்தால் பெற்ற உரிமைகள்)

1. சதுர்வேதிமங்கல நிலத்துக்கு நீர்க்கீய்ந்தவாறு வாய்க்கால் குத்திப் பாச்சவும் வாரவும் பெறுதல்
2. சதுர்வேதிமங்கல நிலத்துக்கு நீர்பாய் வாய்க்கால்கள் தன்மேநடை நீர் பாயவும் வாரவும் பெறுதல்
3. மேற்படிவாய்க்கால்கள் அன்னியர் குறங்கறுத்துக் குத்தவும், குற்றேத்தம் பண்ணவும், கூடைநீர் இறைக்கவும், விலங்கடைக்கவும் பெறாததாகல்
4. செந்நீர்ப் பொதுவினையாதிதாக அந்நீர் அடைத்துப் பாய்ச்சப் பெறுவதாகல்
5. சுட்டோட்டால் மாடமாளிகை எடுக்கப் பெறுதல்
6. துரவு கிணறு இழிக்கப் பெறுதல்

7. காயும் தெங்கும் இடப்பெறுவதாகல்
8. மருவும் தமநகமும் இருவெரியுஞ் செண்பகமுஞ் செங்கழுநீரும் மாவும் பலாவும் தெங்கும் கமுகும் புன்னையும் கொடியும் உள்ளிட்டு பல்லுருவில் பயன்மரம் இடவும் நடவும் பெறுவதாகல்
9. பெருஞ் செக்கிடப் பெறுவதாகல்
10. இவ்வூர் நிலத்தாறு போய்ப் புறவூர்க்கு நீர்பாயும் வாய்க்கால்கள் மேனடை பாயவும் வாரவும் பெறுதல்
11. புறவூர் நிலத்தாறு போந்து இவ்வூர் நிலத்துக்கு நீர்பாய் வாய்க்கால்கள் மேனடை நீர்பாயவும் வாரவும் பெறுதல்
12. மேற்படி ஊர்களில் இட்ட தெங்கும் பனையும் ஈழவர் ஏறப்பெறாததாகல்
13. மேற்படியூர் வளையில் சுற்று முற்றிலும் கொலை, களவு, பாதகம், இறைதரவு, தண்டம் எறியவும், குத்தவும், கொல்லவும், வினவவும் பெறுவதாகல்
14. இவ்வூர்ப் பிடாகை வட்டத்துக் களவுகண்டாரைத் தாக்கி இறக்குமளவும் சென்று பிடிக்கவும் எறியவும் குத்தவும் பெறுவதாகல்

வரி வருமானங்கள் (பரிகாரங்கள்)

இதுவரை அரசுக்குரிமையானவையாய் இருந்து பின்னர் இக்கொடை பெற்றதன் வழி பிரம்மதேய உரிமையுடையோர் பெறுதற்குரிய **வரிவருமானங்கள்:**

நாடாட்சி, ஊராட்சி, வட்டிநாழி, பிதாநாழி, கண்ணாலக்காணம், வண்ணாரப்பாறை, குசக்காணம், நீர்க்கூலி, இலைக்கூலம், ஈழப்பூட்சி, பழிஉறவு, மோரம், முத்தாபரணம், தறியிறை, தரகு, தட்டாரப்பாட்டம், இடைப்பாட்டம், ஆட்டுக்கிறை, நல்லா, நல்லெருது, நாட்டுக்கால், ஊடுபோக்கு, விற்பிடி, வாலமஞ்சாடி, உல்கு, ஓடக்கூலி, மன்றுபாடு, மாவிறை, தீயெரி, கூத்திகால்.

12. அறக்கொடைப் பங்கு பெற்ற சதுர்வேதி பட்டர்கள்*

முதலாம் இராஜாதிராஜனின் அறக்கொடையில் தோற்றுவிக்கப்பட்ட சோழகுல நாராயணச் சதுர்வேதி மங்கலம் 130 சதுர்வேதிகளுக்குக் கொடுக்கப்பட்டதாகவும், இரண்டாம் இராஜேந்திரனின் அறக்கொடையினையும் இணைத்து அகர பிரம்மதேயம் இராஜேந்திரச் சதுர்வேதி மங்கலமென உருவாக்கப்பட்டபோது 730 சதுர்வேதி பட்டர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகிறது செப்பேடு. முன்னுள்ள நிலப் பகுதிகள் இணைக்கப்படுதலின் முன் குறித்த பட்டர்களையும்

* பங்கு பெற்ற சதுர்வேதி பட்டர்களின் பட்டியல் தனியாக வெளியிடப்படும்.

உள்ளடக்கிய எண்ணிக்கையாகவே 730-ஐக் கருதலாம். ஆயினும் கொடுக்கப்பட்ட பட்டியலின்படி எண்ணிக்கை 666 மட்டுமே. அதிலும் பிரம்மாத்ம பட்டர், சந்திர பூஷணபட்டர் ஆகியோருக்குப் பங்குகள் இருமுறை தனித்தனியாகக் குறிப்பிடப்படுகின்றன. எனவே பயன் பெற்றோர் உண்மையில் 664 பேர் மட்டுமே ஆவர். (சமஸ்கிருதப் பகுதியில் 656 பேருக்குத்தான் கொடுக்கப்பட்டதாகக் குறிக்கப்படுகிறது) எனவே எண்ணிக்கையில் சில மாற்றங்கள் உள்ளன.

நிலம் பெற்றவர்களுள் பின்வருவோர் இந்த அரசாணையோடு தொடர்புடையவர்கள்.

1. நெற்குன்றத்து நாரசிம்மன் சந்திரபூஷண பட்டரான சோழப் பிம்மாதிராஜர். இவர் பெற்ற பங்குகள் நாலு; அதனுடன் பெருமாளைச் சாசன ஸ்லோகம் சொல்லியதற்குத் தட்சிணை பெற்ற பங்கு ஒன்று.
2. வலப் பொதியெள்ளும் இடவயிறு மேல்சார் எள்ளுமுடைய நடுவிருக்கும் சிறுநாலூர்ச் சக்கிரபாணி பிரம்மாத்ம பட்டர். இவர் இவ்வூர் பிரசஸ்தி சொல்லியதற்குப் பெற்ற தட்சிணைப் பங்கு ஒன்று; பிற சதுர்வேதிகளோடு ஒருங்குவைத்து இவர்களோடு பெற்ற பங்குகள் மூன்று.
3. பங்கு பெற்றோரில் குறிப்பிடத்தக்க மற்றொருவர் முதலாம் இராஜேந்திரனின் குருதேவர்; அவர் பெற்ற பங்குகள் இரண்டு.

13. இராஜேந்திரச் சதுர்வேதி மங்கலத்திலுள்ள கோயில்களும் அவற்றுக்குரிய பங்குகளும்

ஸ்ரீ கயிலாஸமான ஸ்ரீஇராஜேந்திர ஈஸ்வர முடையார்க்குப் பங்கு 2 ¾

[இதில்

1. ராஜராஜப் பாண்டி நாட்டுத் திருக்கானப்பேர் கூற்றத்துத் திருக்கானப்பேரைச் சேர்ந்த
   காஸ்யப கோத்திர பௌதாயன சூத்திர சிவப்பிராமணன் ஸ்ரீகண்டன் அரியேறான கேரளகுஞ்சரப் பிரம்ம மாராயனுக்குச் செம்பாதி
2. ராஜாதிராஜ வளநாட்டுக் குறுக்கை நாட்டு விக்கிரமசோழச் சதுர்வேதி மங்கலத்து
   காஸ்யப கோத்திர பௌதாயன சூத்திர சிவப்பிராமணன் நந்திபெருமான் ஆதித்த பிடாரனுக்குச் செம்பாதி

நடுவில் திருமுற்றமான ஸ்ரீராஜேந்திர விண்ணகராள்வார்க்குப் பங்கு 1 ¾

[இதில்

1. இராஜேந்திர சிங்க வளநாட்டுத் திருவாலிநாட்டு ஸ்ரீமும்மடி சோழச்சதுர்வேதி மங்கலத்து
பாரத்வாஜ கோத்திர வைகானஸ சூத்திர வைகானஸன் திருவிக்கிரமன் நாராயணனுக்குச் செம்பாதி

2.ராஜராஜ வளநாட்டு திருவாலிநாட்டு மல்லிகுடி கௌதம கோத்திர வைகானஸ சூத்திர வைகானஸன் ஆனந்தரங்க சங்கர நாராயணனுக்குச் செம்பாதி]

திருமேற்கோயிலான கீர்த்தி நாராயண விண்ணகர் ஆள்வார்க்குப் பங்கு 1 ¾

[இதில்
உய்யக் கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுத் திருவிண்ணகர்
காஸ்யப கோத்திரத்து வைகானஸ சூத்திரத்து வைகானஸன்
திருநாராயண பட்டனுக்கு நாலோபாதி

நித்த வினோத வளநாட்டு வெண்ணாட்டுக் கரம்பக்காட்டு
பார்க்கவ கோத்திரத்து வைகானஸ சூத்திரத்துக்
கருமாணிக்கன் திருச்சிற்றம்பலமுடையானுக்கு நாலோபாதி

ஜயங்கொண்ட சோழ வளநாட்டு வளைநாட்டுக்
காஸ்யப கோத்திரத்து வைகாநஸ சூத்திரத்து
வைகானஸன் மீகாளன் உத்தமனுக்கு நாலோபாதி

இராஜாதிராஜ வளநாட்டு மண்ணி நாட்டுச்
சோழ மார்த்தாண்டச் சதுர்வேதி மங்கலத்துக்
கோதம கோத்திரத்து வைகானஸ சூத்திரத்துக்
கேசவன் திருவரங்க தேவபட்டனுக்கு நாலோபாதி]

சூர்ய தேவர்க்குப் பங்கு 1/4

[ராஜேந்திர சிங்க வளநாட்டுத் திருவாலிநாட்டுப் பிரம்மதேயம்
ஸ்ரீமும்முடி சோழச் சதுர்வேதி மங்கலத்துப் பார்க்கவ கோத்திரத்து
வைகானஸ சூத்திரத்து வைகானசன் திருவிக்கிரமன் நாராயணனுக்கு
இது காணி]

சுப்பிரமணிய தேவர்க்குப் பங்கு 1/4

[இத்தேவர் கோயில் சிவப்பிராமணன் ராஜாதிராஜ வளநாட்டுத்
திருவிந்தளூர் நாட்டு உத்தமச் சோழச் சதுர்வேதி மங்கலத்துப்
பாரத்வாஜ கோத்திரத்துப் பௌதான்ய சூத்திரத்து சிவபிராமணன் பட்டன்
பராந்தகனுக்கு இது காணி]

துர்க்கையார்க்குப் பங்கு 1/4

[இத்தேவரை ஆராதிக்கும் வைகானஸன் ராஜேந்திர சிங்க வளநாட்டு
மும்முடிசோழச் சதுர்வேதி மங்கலத்துக் கௌதம கோத்திரத்து
வைகானஸ சூத்திரத்துப் பட்டடிகள் திருவிக்கிரமனுக்கு இது காணி]

சப்தமாதிருக்களுக்குப் பங்கு 1/2
மகா சாஸ்தாவுக்குப் பங்கு 1/8

14. பிடாகை ஊர்களிலுள்ள கடவுளர்க்கு விட்ட நிலங்கள்

1. திருச்சிற்றம்பல நல்லூர் திருக்காமீஸ்வரமுடைய மகாதேவர்க்கு -- அரைமாவரைக்காணிக் கீழ் எட்டுமா முக்காணிக் கீழரையே இருமாவரை

2. மேற்படியூர் மகாவிஷ்ணுக்களுக்கு -- அரைமாவின் கீழரையே இருமாவரை

3. ஒலோக மாதேவி நல்லூர்த் திருவகத்தீஸ்வரமுடைய மகாதேவர்க்கு -- அரைமா முந்திரிகைக்கீழ் அரைமா, முந்திரிகைக் கீழ்க்கால்

4. மேற்படியூர் மகாவிஷ்ணுக்களுக்கு -- அரைமா முந்திரிகைக்கீழரை மா முந்திரிகைக்கீழ்க் கால் மா

5. திருப்பராந்தக நல்லூர் திருப்பூங்கோயிலுடைய மகாதேவர்க்கு - நிலம் அரை

6. மேற்படியூர் மகாவிஷ்ணுக்களுக்கு -நிலம் அரை

7. இராஜராஜ நல்லூர் மகாதேவர்க்கு -நிலம் அரைமா

8. விக்கிரம சோழபாண்டிய நல்லூர் மகாதேவர்க்கு -அரைமாவரைக்காணி

9. மணலூர்த் தென் கயிலாயமுடைய மகாதேவர்க்கு -ஒருமா

மேற்படியூர்க் கூகீஸ்வரமுடைய மகாதேவர்க்கு -ஒருமா
மேற்படியூர் மகாவிஷ்ணுக்களுக்கு -அரைமா
மேற்படியூர்ப் பிடாரியார்க்கு -அரைமாக்காணி

சாசனமங்கலம்
திருநீலகண்டஈஸ்வரமுடைய மகாதேவர்க்கு -ஒருமா
சென்னிநல்லூர்ப் பிடாரியார்க்கு -அரைக்காணி

கீழை மதுராந்தக நல்லூர் மகாவிஷ்ணுக்களுக்கு	-அரைமா
மேலை மதுராந்தக நல்லூர்	
திருமணிக் கோயில் ஈஸ்வரமுடைய மகாதேவர்க்கு	-ஒருமாவரை
மேற்படியூர் விஷ்ணுக்களுக்கு	-அரைமா
மேற்படியூர்த் துற்கையார்க்கு	-காணி
மேற்படியூர் சேஷத்திரபால தேவர்க்கு	-காணி
மேற்படியூர்ப் பிடாரியார்க்கு	-காணி
நெல்வாயில்	
புகலோக ஈஸ்வரம் உடைய மகாதேவர்க்கு	-ஒருமாவரை
மேற்படியூர்ப் பிடாரியார்க்கு	-காணி
கடுவன்குடி மகாதேவர்க்கு	-அமைாவின் கீழ் இரண்டுமா முக்காணி அரைக்காணிக் கீழ் முக்காலே இருமாவரை
மேற்படியூர் விஷ்ணுக்களுக்கு	- ஒருமா
மேற்படியூர்த் துற்கையார்க்கு	- காணி
மேற்படியூர்ப் பிடாரியார்க்கு	- அரைக்காணி
திருப்பாலைக்குடி மகாவிஷ்ணுக்களுக்கு	- அரைமா
மேற்படியூர்ப் பிடாரியார்க்கு	- அரைக்காணி
கங்கைகொண்ட சோழ நல்லூர்த் துற்கையாற்கு	- காணி
கந்தணம் புத்தூர் அகஸ்தீஸ்வரமுடைய மகாதேவர்க்கு	- ஒருமா
மேற்படியூர் மகாவிஷ்ணுக்களுக்கு	- ஒருமா
மேற்படியூர் துற்கையார்க்கு	- காணி
மேற்படியூர்ப் பிடாரியாற்கு	- காணி
எயினங்குடி மகாதேவர்க்கு	- அரைமா
மேற்படியூர் மகாவிஷ்ணுக்களுக்கு	- ஒருமா
மேற்படியூர்த் துற்கையாற்க்கு	- காணி
மேற்படியூர்ப் பிடாரியார்க்கு	- அரைக்காணி
அகனக்குடி	
திருநாணீஸ்வரமுடைய மகாதேவர்க்கு	- ஒருமா
மேற்படியூர் மகாவிஷ்ணுக்களுக்கு	- அரைமா

மங்கலநல்லூர்

பசுபதி ஈஸ்வரமுடைய மகாதேவர்க்கு - ஒருமா

மேற்படியூர் மகாவிஷ்ணுக்களுக்கு - அரைமா

மேற்படியூர்ப் பிடாரியார்க்கு - அரைக்காணி

உழுத்துக்குப்பை மகாவிஷ்ணுக்களுக்கு - அரைமா

மேற்படியூர்ப் பெரும்பிடுகீஸ்வரமுடைய மகாதேவர்க்கு - அரைமா

பனம்பள்ளி மகாதேவர்க்கு - அரைமா

மேற்படியூர் மகாவிஷ்ணுக்களுக்கு - அரைமா

மேற்படியூர்ப் பிடாரியார்க்கு - அரைக்காணி

மணிகங்கை கொண்டல் தேவர்க்கு - முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரை

மேற்படியூர் மகாவிஷ்ணுக்களுக்கு - அரைமா

மேற்படியூர்ப் பிடாரியார்க்கு - அரைக்காணி

விட்டிலூர் மகேந்திர விண்ணகராழ்வார்க்கு - ஒருமாவரை

மேற்படியூர் அருமொழி ஈஸ்வரமுடைய மகாதேவர்க்கு - அரைமா

மேற்படியூர்த் திருமேற்கோயிலாழ்வார்க்கு - அரைமா

மேற்படியூர்ப் பிடாரியார்க்கு - காணி

சேமங்கலத்து மகாவிஷ்ணுக்களுக்கு - அரைமா

மேற்படியூர் மகாதேவர்க்கு - ஒருமா

மேற்படியூர்ச் சுப்ரமண்யதேவர்க்கு - காணி

மேற்படியூர்ப் பிடாரியார்க்கு - அரைக்காணி

நீடூர்க் கருமாணிக்க தேவர்க்கு - ஒருமா

மேற்படியூர்த் திருமேற்கோயிலாழ்வார்க்கு - அரைமா

அருமொழிதேவ நல்லூர் திருவகத்தீஸ்வரமுடைய மகாதேவர்க்கு -மாகாணி முந்திரிகைக் கீழ்முக்காலே இருமாவரை

மேற்படியூர் ஸ்ரீராஜேந்திர விண்ணகராழ்வார்க்கு -முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழரையே இருமாவரை

மேற்படியூர்ப் பிடாரியார்க்கு -முந்திரிகைக்கீழ்க்கால்

ஆனைநல்லூர் ஸ்ரீகயிலாசமுடைய மகாதேவர்க்கு	-முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே காணி அரைக்காணிக் கீழ்க்கால்
மேற்படியூர் இராஜேந்திர விண்ணகராழ்வார்க்கு	-முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழரையே இருமாவரை
மேற்படியூர்ப் பிடாரியார்க்கு	-முந்திரிகைக்கீழ்க்கால்
பூதிகுடி ராஜேந்திர விண்ணகராழ்வார்க்கு	-முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழரையே இருமாவரை
மேற்படியூர்ப் பிடாரியார்க்கு	-முந்திரிகைக் கீழ்க்கால்
அழகியசோழநல்லூர் மகாவிஷ்ணுக்களுக்கு	-அரைமாவின் கீழ் எட்டு மாக்காணி அரைக்காணிக் கீழரை
ஏனாதிமங்கலத்துப் பிடாரியார்க்கு	-முந்திரிகைக் கீழ்க்கால்
கோட்டூர்ப் பிடாரியார்க்கு	-முந்திரிகைக்கீழ்க்கால்

15. பல்துறை நூற் புலமை வளர்ச்சிக்கு அளிக்கப்பட்ட பங்குகள்

பவிழியக் கிடைப்புறம்	-மூன்றுமா முக்காணி அரைக்காணி முந்திரிகை
தயித்திரியக் கிடைப்புறம்	-மூன்றுமா முக்காணி அரைக்காணி முந்திரிகை
வாஜஸநேயம்	-இரண்டுமா
சந்தோக சாமவேதக் கிடைப்புறம்	-மும்மாவரை
தலவகாரக் கிடைப்புறம்	-இரண்டு மாக்காணியரைக்காணி முந்திரிகை
ஷடங்கம்(ஷட் அங்கம்)	-ஒருமா முக்காணி
வியாகரணபட்ட விருத்தி	-காலே அரைமா முந்திரி
பிரபாகர விருத்தி	-முந்திரிகை
பட்ட தரிசனத்துக்கும் ப்ரஹட்டீகைக்கும் காரிகைக்கும்	-காலே அரைமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா

தந்திரதீபிகை	-காலேஅரைமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நாலுமா முக்காணி அரைக்காணிக் கீழரை
மீமாம்சை பட்ட விருத்தி	-காலே அரைமாவரைக் காணிக்கீழ் முக்காலே மூன்று மாவரைக்காணி
பிரபாகர விருத்தியாச் சுவேதாந்த விருத்தி	-காலே அரைமா முந்திரிகை
மனுஉள்ளிட்ட ஸ்மிருதி விருத்தி	-நாலுமாமுக்காணிக் கீழ்முக்கால்
மகாபாரத, ஸ்ரீஇராமாயணம்	-நாலுமா
ரூபாவதார விருத்தி	-மூன்று மாவரைக்காணி முந்திரிகைக் கீழ் அரையே முக்காணி முந்திரிகைக் கீழ்முக்கால்
விஷ விருத்தி	-இரண்டுமா முக்காணிக் கீழ் அரையே ஒருமாவரைக்காணிக் கீழ்கால்

16. இச்சதுர்வேதி மங்கலத்தில் பணிபுரியும் பல்வகைப் பணியாளர்களுக்கும் கொடுக்கப்பட்ட பங்குகள்

சவர்ணர்

ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் புழல்நாட்டுப் பெருங்கையூரான
ஜயங்கொண்டசோழச் சதுர்வேதி மங்கலத்து
நாக கோத்திரத்துப் பௌதான்ய சூத்திரத்து
ஸ்ரீமாதவன் சூர்யதேவ பட்டர்க்கு வைத்தியப்பங்கு 1

இம்மண்டலத்து எறுசேவக் கோட்டத்துத் தாமர்நாட்டு விக்கிரம
சிங்கச் சதுர்வேதி மங்கலத்துப் பார்கவ கோத்திரத்துப்
பௌதான்ய சூத்திரத்து ராஜாதித்தனான முடிகொண்டசோழ
மங்கலப் பேரையனுக்கு வைத்தியப்பங்கு 1

சோதிடம்

ராஜாதிராஜ வளநாட்டுக் குறுக்கை நாட்டு உத்தமச் சோழத்
திருமங்கலத்துப் பாரத்வாஜ கோத்திரத்து
அபிஷிதத்தன் மாதகமலை உலகளந்தானுக்கு ஜோதிஷப்பங்கு ¾

அம்பட்டர்

சஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பனையூர் நாட்டு
தானதொங்கச் சதுர்வேதி மங்கலத்து அம்பட்டன் அழகியசோழப்
பிரயோகத் தரையனுக்கு அம்பட்ட பங்கு ½

கண்காணி/ கணக்குக் காணி/காவிதி/காவிதிக்காணி

அருமொழிதேவ வளநாட்டு தக்களூர் நாட்டுத் தக்களூர் மத்யஸ்தன் ஊரான் மும்முடிச் சோழனான தானவினோதப் பல்லவரையனுக்குக் கண்காணிப்பங்கு 1

மேற்படியான் சோழகுல நாராயணச்சேரி காவிதிப்பங்கு பெற்றவன் மேற்படிநாட்டுப் பருத்தியூர் சீராமனுக்குக் காவிதிக்காணிப்பங்கு 1/8

ராஜேந்திர சிங்க வளநாட்டு இன்னம்பர் நாட்டு ஆதனூர் மத்யஸ்தன் பொன்மலை ஈஸ்வரனுக்குக் கணக்குக் காணிப்பங்கு ½

மேற்படியூர் மத்யஸ்தன் பொன்மலை சீரிளங்கோவுக்குக் காவிதிக்காணிப்பங்கு 1/8

ஜெயங்கொண்ட சோழ வளநாட்டு விளைநாட்டு உலகுய்யக் கொண்ட சோழச்சதுர்வேதி மங்கலத்து மத்யஸ்தன் மயிலை அருமொழிக்குக் காவிதிப்பங்கு 1/8

இராஜாதிராஜ வளநாட்டு மேற்காநாட்டு உலகளந்த சோழச்சதுர்வேதி மங்கலத்து மத்யஸ்தன் பட்டன் தாமோதரனுக்குக் காவிதிப்பங்கு 1/8

மேற்படியூர் மத்யஸ்தன் பட்டன் சிவக்கொழுந்துக்குக் காவிதிக் காணிப்பங்கு 1/16

இன்னாட்டுத் திருவிந்தளூர் நாட்டு மணிக்குடி மத்யஸ்தன் பிரளையன் திருமலைக்கு காவிதிக்காணிப்பங்கு 1/8

இன்னாட்டுக் குறுக்கைநாட்டு விக்கிரமசோழச் சதுர்வேதிமங்கலத்து மத்யஸ்தன் நானூற்றுவன் முத்தானுக்குக் காவிதிக்காணிப்பங்கு 1/8

சல்லியவிருத்தி

சஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பனையூர் நாட்டுத் தானதொங்கச் சதுர்வேதி மங்கலத்து அம்பட்டன் அழகிய சோழபிரயோகத்தரையனுக்கு சல்யவிருத்திப்பங்கு 1/4

[இது முன்பு சோழகுல நாராயணச் சதுர்வேதி மங்கலமாய் இருந்தபோது சபையார் சல்ய விருத்தியாக வைத்து தாதநாடியாந் சோறுடையான் அனுபவித்து வருகின்றது.]

மேற்படியான் அரச ஆணையால் (திருமுகத்தால்) தற்போது மீண்டும் பெற்ற சல்யவிருத்திப்பங்கு 1/4

மண்ணுடையார்

1. இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டுத் திருவிந்தளூர் மண்ணுடையான் அண்ணாத்தடிகள் சூற்றியூர் மணியன்

2. மேற்படியூர் மண்ணுடையான் சித்தடிகள் ஆடவலான்
3. மேற்படி நாட்டு அழகியசோழச் சதுர்வேதிமங்கலத்து மண்ணுடையான் பாக்கரன் சந்திரசேகரன்
4. மேற்படியூர் மண்ணுடையான் பெரியான் காளி
5. மேற்படிநாட்டு மேலை மதுராந்தக நல்லூர் மண்ணுடையான் கங்கன் சிவீக்கொழுந்து
6. மேற்படிநாட்டு விட்டிலூர் மண்ணுடையான் தொட்டான் அம்பலத்தாடி
7. மேற்படிநாட்டுக் கீழாதனூர் மண்ணுடையான் கனக நாராயணன்
8. மேற்படிநாட்டு உத்தமசோழச் சதுர்வேதி மங்கலத்து மண்ணுடையான் முள்ளூர் நீறணிந்தான்
9. மேற்படியூர் மண்ணுடையான் முள்ளூர் வெண்காடன்
10. மேற்படிநாட்டு நயபர மங்கலச் சதுர்வேதிமங்கலத்து மண்ணுடையான் தொட்டான் கெருளன்
11. மேற்படியூர் மண்ணுடையான் நானூற்றான் காவன்
12. மேற்படிநாட்டு குறுக்கை நாட்டுப் பொய்கைக்குடி மண்ணுடையான் வெண்ணை சூற்றி
13. மேற்படிநாட்டு விக்கிரமசோழச் சதுர்வேதிமங்கலத்து மண்ணுடையான் பாக்கரன் சங்கரன்
14. மேற்படியூர் மண்ணுடையான் பாக்கரன் பொற்கேசன்
15. மேற்படியூர் மண்ணுடையான் பெரியான் வெண்காடன் [இவன் மகா சாஸ்தாவை ஆராதிப்பவன்]
16. மேற்படிநாட்டு திருவாலி நாட்டு நாராயண மங்கலத்து மண்ணுடையான் கடம்பன் முந்நூற்றுவன்
17. மேற்படிநாட்டு மண்ணிநாட்டுச் சோழ மாத்தாண்டச் சதுர்வேதிமங்கலத்து மண்ணுடையான் காரிதாமோதரன்
18. மேற்படிநாட்டு வெண்ணையூர் நாட்டுப் பஞ்சவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலத்து மண்ணுடையான் கருணாகரன் கண்ணாடி
19. ஜெயங்கொண்ட சோழவளநாட்டு வெண்ணாட்டுத் திருவீழிமிழலை மண்ணுடையான் அத்தன்தத்தன்
20. மேற்படிநாட்டுத் திருவெழுந்தூர் நாட்டு அகர பிரம்மதேயம் விஜயராஜேந்திரச் சதுர்வேதி மங்கலத்து மண்ணுடையான் சோமன் மாணிக்கன்
21. மேற்படிநாட்டு வழகூர் மண்ணுடையான் ஈசன் சந்திரன்
22. உய்யக்கொண்டார் வளநாட்டுப் பேராவூர் நாட்டுக் காமக்கச் சதுர்வேதி மங்கலத்து மண்ணுடையான் நாராயணன் காளப்பன்.

உவச்சர்

இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு நீடூர்ப் பாரசவன் திருமயில் வடுகநாதனான தென்னவன் தமிழவேளான் வாஸ்துவில் பிடாரி கோயில் காணி - செம்பாதி.

மேற்படியானுக்கு ஸ்ரீகயிலாஸமான ஸ்ரீராஜேந்திர ஈஸ்வரமுடையார் கோயில் உவச்சக்காணி - மூன்றோபாதி

மேற்படியானுக்குத் திருமேற்கோயிலான கீர்த்தி நாராயண விண்ணகர் ஆழ்வார் கோயில் உவச்சக்காணி - மூன்றோபாதி

இந்நாட்டு மதுராந்தக நல்லூர்ப் பாரசவன் முன்னூற்றுவன் ஆடவலானுக்கு ஸ்ரீகயிலாஸமான ஸ்ரீராஜேந்திர ஈஸ்வரமுடையார் கோயில் உவச்சக்காணி - மூன்றோபாதி

மேற்படியானுக்குப் பிடாரிகோயிலில் - பாதி

மேற்படியூர் பாரசவன் முந்நூற்றுவன் கவாலப்பனுக்கு திருமேற்கோயிலான கீர்த்திநாராயண விண்ணகராழ்வார் கோயில் உவச்சக்காணி - மூன்றோபாதி

மேற்படியூர்ப் பாரசவன் ஆடவலாந் முத்தாழிக்கு மேற்படிக் கோயில் உவச்சக்காணி - மூன்றோபாதி

இந்நாட்டுக் கீழை மதுராந்தக நல்லூர்ப் பாரசவன் முத்தாழி ஆடவலானுக்கு ஸ்ரீகயிலாஸமான ஸ்ரீராஜேந்திர ஈஸ்வர முடையார் கோயிலில் உவச்சக்காணி - மூன்றோபாதி

சஷதிரிய சிகாமணி வளநாட்டு வேளாநாட்டுப் பிரம்மதேயம் ஸ்ரீராஜேந்திர சோழச்சதுர்வேதி மங்கலத்துப் பாரசவன் வாசுதேவன் சூற்றிக்கு நடுவில் திருமுற்றமான ஸ்ரீராஜேந்திர விண்ணகராழ்வார் கோயிலில் உவச்சக்காணி - செம்பாதி

மேற்படியூர்ப் பாரசவன் சூற்றி நம்பகேனுக்கு மேற்படி கோயில் உவச்சக்காணி - செம்பாதி

அம்பணவர்

இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு உத்தமச் சோழச் சதுர்வேதி மங்கலத்து அம்பணவன் முன்னூற்றுவன் திருவிராமீஸ்வரன் மேற்படியூர் அம்பணவன் திருவடிகள் தேவன்

மேற்படியூர் அம்பணவன் எச்சில் முன்னூற்றுவன்

மேற்படியூர் அம்பணவன் மழபாடி தோன்றி

ராஜாதிராஜ வளநாட்டுத் தனியூர் பெரும்பற்றப் புலியூர்ப் பதியந் தேவன் ஆச்சபிடாரன்

வளைகிழவர்

இராஜாதிராஜ வளநாட்டு திருவிந்தளூர் நாட்டுத் திருவிந்தளூர்க்கு
வளைக்கிழவன் கயிறூர் வீராணன்

மேற்படியூர் வளைக்கிழவன் அழுதன் ஆதிவிடங்கன்

மேற்படிநாட்டு நயபரச் சருப்பேதிமங்கலத்துக்கு வளைக்கிழவன்
வெண்காடன் எழுவன்

மேற்படிநாட்டு ஆலங்குடிக்கு வளைக்கிழவன் திருநாகீஸ்வரன் வாமனன்

மேற்படிநாட்டுக் குறுக்கை நாட்டு மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துக்கு
வளைக்கிழவன் மாந்துறை நிச்சமிணாளன்

இடையர்

இராஜாதிராஜ வளநாட்டுத் திருக்கழுமலநாட்டுத் திருக்கழுமலத்து
இடையன் கடம்பன் பொற்கண்ணன்

மேற்படியூர் இடையன் பொற்கண்ணன் கடம்பன்

மேற்படியூர் இடையன் எச்சுமண்டை தேவர் கண்டன்

சங்கரபாடியார்

இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு அழகிய சோழச்
சதுர்வேதி மங்கலத்து சங்கரப்பாடியார் காரிமணியன்

ஜயங்கொண்ட சோழவளநாட்டு ஆக்கூர்நாட்டு மறிச்சேரி சங்கரபாடியான்
பிசங்கன் எழுபத்தைவன்

மேற்படியூர் சங்கரப்பாடியான் நல்லாவூர் வெண்காடன்

நாவிதர்

ராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு உத்தம சோழச்சருப்பேதி
மங்கலத்து நாவிதன் பிச்சன் அடைக்கலத்துக்கு
நாவிதப்பங்கு -அரைமாவரைக்காணி

மேற்படிநாட்டுக் கஞ்சாற்று நாவிதன் சவையான்
சோறுடையானுக்கு நாவிதப்பங்கு -அரைமாவரைக்காணி

மேற்படியூர் நாவிதன் சவயான் அடிகளுக்கு நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக் கிழ் இரண்டுமா முக்காணி
முந்திரிகைக் கீழரையே இருமாவரை

மேற்படியூர் நாவிதன் அய்யாறன் முந்நூற்றுவனுக்கு நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக் கிழிரண்டுமா முக்காணி
முந்திரிகைக்கீழ் அரையே இருமாவரை

மேற்படியூர் நாவிதன் கஞ்சாறன் சங்கனுக்கு நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக்கிழ இரண்டுமா முக்காணி
முந்திரிகைக்கீழ் அரையே இருமாவரை

மேற்படியூர் நாவிதன் சவயான் வெண்காடனுக்கு நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக் கிழிரண்டுமா முக்காணி
முந்திரிகைக்கீழ் கீழரையே இருமாவரை

மேற்படிநாட்டு இராஜாஸ்ரய மங்கலத்து நாவிதன் பூவணவந் கூத்தாடிக்கு
நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக் கிழ் இரண்டுமா முக்காணி
முந்திரிகைக் கீழரையே இருமாவரை

மேற்படியூர் நாவிதன் சந்திரன் முன்னூற்றுவனுக்கு நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக் கிழ் இரண்டுமா முக்காணி
முந்திரிகைக் கீழரையே இருமாவரை

மேற்படிநாட்டு அழகியசோழச் சதுர்வேதி மங்கலத்து நாவிதன் குமாரன்
வெண்காடனுக்கு நாவிதப்பங்கு
காணி அரைக்காணிக் கீழரையே மூன்றுமாக்காணி
முந்திரிகைக்கீழ் அறுமாவரை யரைக்காணி முந்திரிகை

மேற்படிநாட்டுக் குறுக்கை நாட்டுப் பொய்கைக்குடி நாவிதன் செல்வன்
பொன்னம்பலத்துக்கு நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக்கீழ் இரண்டுமா முக்காணி
முந்திரிகைக்கீழ் அரையே அரைக்கால்

மேற்படிநாட்டு மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து நாவிதன் மணஞ்சேரி
தியாமொழிக்கு நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக் கிழ் இரண்டுமா முக்காணி
முந்திரிகைக் கீழரை அரைக்கால்

மேற்படியூர் மணஞ்சேரி வெண்காடனுக்கு நாவிதப்பங்கு
முக்காணி முந்திரிகைக்கீழ் அறுமாவரை அரைக்காணிக்
கீழரையே மூன்று மாகாணி முந்திரிகை

மேற்படிநாட்டுக் கங்கைகொண்டசோழச் சதுர்வேதிமங்கலத்து நாவிதன்
நூற்றெண்மன் சொன்னானுக்கு நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக்கீழ் இரண்டுமா முக்காணி
முந்திரிகைக்கீழ் அரையே அரைக்கால்

மேற்படிநாட்டுப் பஞ்சவன் மாதேவிச் சதுர்வேதிமங்கலத்து நாவிதன்
வளைகுளவந் கங்கைகொண்டானுக்கு நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக் கிழ் இரண்டுமா முக்காணி
முந்திரிகைக் கீழரையே அரைக்கால்

மேற்படிநாட்டு நாங்கூர் நாட்டுக் குந்தவைச் சதுர்வேதிமங்கலத்து நாவிதன்
கோவிந்தன் சாய்க்காடனுக்கு நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக் கிழ் இரண்டுமா முக்காணி
முந்திரிகைக் கீழரையே அரைக்கால்

ஜயங்கொண்டசோழ வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டு வழங்கூர் நாவிதன்
முந்நூற்றுவன் தேவனுக்கு நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக் கிழ் இரண்டுமா முக்காணி
முந்திரிகைக் கீழரையே அரைக்கால்

மேற்படிநாட்டுத் திருவழுந்தூர் நாவிதன் பட்டன் சாத்தனுக்கு நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக் கிழ் இரண்டுமா முக்காணி
முந்திரிகைக் கீழரையே அரைக்கால்

மேற்படிநாட்டுக் கங்கைகொண்ட சோழச் சதுர்வேதிமங்கலத்து நாவிதன்
நாராயணன் மஞ்சனுக்கு நாவிதப்பங்கு
ஒருமா முந்திரிகைக் கிழ் இரண்டுமா முக்காணி
முந்திரிகைக் கீழரையே அரைக்கால்

நிலமளந்து கூறிட்டோர்

1. குண்டூர் வாமன தசப்பிரிய பட்டன்
2. உறுப்புட்டுர் வெண்காடு தேவ பட்டன்
3. குரவசரி திருவேங்கட நாராயண பட்டன்
4. இராயூர் சொட்டை நாராயண பட்டன் — நால்வருக்கும் சேர்த்து 1 1/8

ஈழவன்*

மேற்படிநாட்டு நல்லூர் புதுக்குடி ஈழவன் நாகராயந் சோமன்

ஈரங்கொல்லி

இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு உத்தமசோழச் சதுர்வேதி
மங்கலத்து ஈரங்கொல்லி வெங்காடன் திருவேங்கடம்

---

* இது முதல் பணியாளர்களின் பெயர் மட்டுமே அவர்கள் பணிபுரியும் ஊரோடு சேர்த்துக் குறிக்கப்படுகிறது. இவர்கட்கு நிலப்பங்கு கொடுக்கப்படவில்லை. பணி செய்து ஊதியம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்று ஊகிக்கலாம்

மேற்படிநாட்டுத் தனியூர் ஸ்ரீவீரநாராயணச் சதுர்வேதிமங்கலத்து ஈரங்கொல்லி
மண்டகவந் ஆச்சன்

மேற்படிநாட்டு மண்ணிநாட்டுச் சோழமாத்தாண்டச் சதுர்வேதிமங்கலத்து
ஈரங்கொல்லி ஆச்சபிடாரன் ஆயிரவன்

உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுப் பிரம்மதேயம்
தண்டந்தோட்டத்து ஈரங்கொல்லி வெண்ணைக் கூத்தன் முடவன்

ஜயங்கொண்டசோழ வளநாட்டுத் திருவெழுந்தூர் நாட்டுத் திருவெழுந்தூர்
ஈரங்கொல்லி திருமேற்றளிச் சுப்பிரமணியன்

மேற்படிநாட்டுப் பெருந்தேவனார்குடி ஈரங்கொல்லி செல்வன் தேவன்

மேற்படிநாட்டுக் குறும்பூர் நாட்டுப் பிரம்மதேயம் திருவிடைக்கழி
ஈரங்கொல்லி அய்யன் பெருமான்

குலையரையர்

இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு விளங்குடி வெட்டப்பேற்றுக்
குலையரையன் மதுராந்தகப் பேரையன்

மேற்படியூர்க் குலையரையன் ராஜேந்திரப் பேரையன்

மேற்படிநாட்டுத் திருவிந்தளூர் மாகுலவன் ஆனைபெருமான் மேற்படியூர்க்
கூரைபுகுவான் ஆனைசெட்டி

தச்சர்

இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டுப் பிரம்மதேயம் அழகியச்
சோழச் சதுர்வேதிமங்கலத்துத் தச்சன் ஆட்டமுத்திதேவன்

மேற்படியூர்த் தச்சன் கடம்பன் காறாயில்

மேற்படியூர்த் தச்சன் மல்லன் நாதன்

திருவிந்தளூர்நாட்டுத் திருக்கழுமல நாட்டு மண்ணைக் கொண்ட
சோழச்சதுர்வேதி மங்கலத்துத் தைச்சன் கணத்தான் ஆராவமுது

மேற்படிநாட்டு திருவிந்தளூர் நாட்டு மதுராந்தக நல்லூர் தைச்சன் அம்பலவன்
ஆடவல்லான்

மேற்படியூர் தைச்சன் அத்தாணி கணபதி

மேற்படியூர்த் தைச்சன் தூங்கானை மணிக்கோயில்

அருமொழிதேவ வளநாட்டு நென்மலிநாட்டுக் கோட்டூர்த் தைச்சன்
கருணாகரன் சிங்கன்

கொல்லர்

இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு நயபரச்சதுர்வேதி
மங்கலத்துக் கொல்லன் ஆச்சன் அறிவாளன்

மேற்படியூர்க் கொல்லன் ஆச்சன் வேங்கடம்

மேற்படிநாட்டுச் செம்பங்குடிக் கொல்லன் வெண்காடன் தேவன்
மேற்படியூர்க் கொல்லன் தேவன் அம்பலத்தாடி
மேற்படிநாட்டு மதுராந்தக நல்லூர்க் கொல்லன் நாட்டான் கலியன்
மேற்படிநாட்டு மணலூர்க் கொல்லன் கண்டன் சாணன்
ஜயங்கொண்ட சோழவளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டு நல்லூர்ப் புதுக்குடிக்
கொல்லன் முழைக்கூத்தன்

தட்டார்

இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு அழகிய சோழச்
சதுர்வேதி மங்கலத்துத் தட்டான் சாத்தன் தூறன்
மேற்படிநாட்டு உத்தமசோழச் சதுர்வேதிமங்கலத்துத் தட்டான்
எச்சில் அம்பலக் கூத்தன்
மேற்படிநாட்டு மண்ணிநாட்டுச் சோழமாத்தாண்டச் சதுர்வேதிமங்கலத்துத்
தட்டான் கருமாணி திருவிசலூர்
மேற்படியூர்த் தட்டான் கருமாணி ஏகன்
மேற்படியூர்த் தட்டான் அம்பலவன் பள்ளிகொண்டான்
மேற்படிநாட்டுத் திருவாலிநாட்டு விக்கிரமசோழச் சதுர்வேதிமங்கலத்துத்
தட்டான் இறுமன் வேங்கடம்
ஜெயங்கொண்ட சோழ வளநாட்டு வெண்ணாட்டுத் திருவீழிமிழலைத் தட்டான்
பெரியான் காளி
மேற்படிநாட்டுப் விளைநாட்டுப் பெரியலூர்த் தட்டான் குன்றன்மலை
மேற்படிநாட்டுத் திருவழுந்தூர்ப் பிரம்மதேயம் கங்கைகொண்ட சோழச் சதுர்வேதி
மங்கலத்துத் தட்டான் பூவன் செடியன்
மேற்படியூர்த் தட்டான் வடசேரிச் சோறன்
மேற்படியூர்த் தட்டான் புங்கன் அரவணையான்
மேற்படியூர்த் தட்டான் கருமாணி தூவாயன்
மேற்படிநாட்டு அகரபிரம்மதேயம் ஸ்ரீவிஜயராஜேந்திரச் சதுர்வேதிமங்கலத்துத்
தட்டான் சாமுண்டன் பொற்றாழி
மேற்படியூர்த் தட்டான் துருத்திதேவன்
மேற்படியூர்த் தட்டான் துருத்தி கூத்தன்
மேற்படியூர்த் தட்டான் கணிச்சை திருவரங்கன்
சஷித்திரிய சிகாமணி வளநாட்டு வேளாநாட்டு ஸ்ரீராஜேந்திர சோழச்
சதுர்வேதிமங்கலத்துத் தட்டான் குமரன் நூற்றெண்மன்
மேற்படியூர்த் தட்டான் குமரன் அரங்கன்
மேற்படியூர்த் தட்டான் எழுவடியான் குமரன்
ஜெயங்கொண்ட சோழவளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டு அயிரக்காட்டுத்
தட்டான் ஆச்சபிடாரன் காவன்

கன்னார்

இராஜாதிராஜ வளநாட்டு நாங்கூர் நாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்துக் கன்னான் அம்பலத்தாடி எடுத்தபாதம்

மேற்படியூர்க் கன்னான் அம்பலத்தாடி ஆடவலான்

வண்ணார்

மேற்படிநாட்டு எருமல வண்ணான் இரணன் நீலகண்டன்

மேற்படிநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு நாகடன்குடி வண்ணான் தேவன்கணபுரம்

மேற்படிநாட்டு நயபரச் சதுர்வேதிமங்கலத்து வண்ணான் அருளிபுத்தன்

பறையர்

மேற்படிநாட்டு திருவிந்தளூர்ப் பறையன் ஆனைவெண்காடன்

மேற்படிநாட்டுக் கரம்பைக்குடி ஊர்ப்பறையன் தம்மிட்டன் சேந்தன்

சாசனம் செய்வித்தவன்

ஸ்ரீவிஜைய ராஜேந்திரச் சதுர்வேதிமங்கலத்து தட்டான் கருணாகரன் பராந்தகன்

அறக்கொடைச் செப்பேட்டினை அரசவையில் வழங்கியபோது உடனிருந்தோர்

1. இப்பிரம்மதேய சபையார்
2. அனைத்து நாட்டு வித்வான்கள்
3. அனைத்து ராஜாக்கள்
4. ராஜமந்திரிகள்

17. ஓம்படைக் கிளவி

இக்கொடைக்கு எதிர்காலத்தில் நன்மை செய்தாரும் (உன்னமை), பரிபாலித்தாரும் பெறும் பலன்

1. சூர்யகிரஹண நாளில் கங்கா சாகர சங்கரமம், வாரணாசி, சாளக் கிராமம், குருக்ஷேத்திரம் உள்ளிட்ட புண்ணியஸ்தானங்களில் பல்லாயிரங் குராற் பசுக்களைக் கொடையளித்த புண்ணியம்
2. அனைத்து வேதங்களிலும் வல்லவராய் (ஸர்வக்ருதியாஜிகள்), வறுமையுடையோராய் (தரித்ரராய்), நிறைந்த அங்கத்தினர்களைக் கொண்ட குடும்பத்தினராய் (பகுகுடும்பிகள்), பிரம்மவித்துக்களாய் இருப்பவர்களுக்கு நிறைந்த துணிமணிகள், அணிகலன்களைக் (வஸ்த்ர அலங்கார பூஷிதம்) கொடையளித்த புண்ணியம்

3. சிவன் (மகாதேவர்), விஷ்ணு (மகாவிஷ்ணு)வுக்கு மிகச்சிறந்த (உத்தமோத்தமம்) கோயில்களை இந்நாட்டில் எடுத்து, அப்போதே இறைவனை எழுந்தருளுவித்து, உயர் பூசையினைத் தினமும் பண்ணியவர்களுக்குரிய புண்ணியம்
4. தர்மப் போரில் (தர்மயுத்தம்), ஆசிகள் பெற்ற சத்திரியநாகச் சிறிதும் அச்சமின்றி நின்று, ஆயுதங்களை வழங்கி எதிர்த்துப் போர் புரிந்து இவ்வுடலை நீத்தார்க்குக் கிடைக்கும் புண்ணியம்
5. பெருமளவிலான தானம் (உத்தம தக்ஷிணை) தகுதியுடையோருக்கு அளித்து அஸ்வமேதம், ராஜசூயம் உள்ளிட்ட யாகங்களைப் பண்ணியவர் பெறும் புண்ணியம்

இந்தத் தர்மத்துக்கு எதிர்காலத்தில் அழிவு செய்வாரும் அவ்வழிவுக்கு உடந்தையாய் இருப்பாரும் பெறும் பாவம்

1. இந்தக்காலத்தில் இந்த தேசத்தில் பசுக்களையும், பிராமணரையும், க்ஷத்திரியரையும், உண்மையான ('புத்திபூர்வமே') அறிவுப்பூர்வமான நிரபராதிகளையும் வதைசெய்தார் பெறும் பாவம்
2. மேற்குறிப்பிட்ட கோயில்களை அழித்தாருக்குள்ள பாவம்
3. அறிவுக்குத் தெரிந்து மகா பாதகங்களைப் பலகாலும் செய்தார் செய்த பாவம்
4. குடும்பத்தாருக்கும் ('க்ருஹஸ்தர்') அரசருக்கும் (ஸ்வாமி) துரோகம் செய்த பாவம்
5. அரசகுடும்பத்திற்கு நெருங்கியவராய் ('ப்ருத்தியராய்')இருந்து, அதற்குப் பிழையும், துரோகமும் செய்தார் செய்த பாவம்

பிற்காலத்தே வரும் அரசர்களை நோக்கி, அரசரே நேரில் வேண்டியதாகக் கூறப்படும் பகுதி

பூமி தானத்தால் வரும் பலமும், பூமியை அபகரிப்பதால் வரும் பாவமும், தர்மத்தைப் பரிபாலனம் செய்வதால் வரும் பலமும் ஆகியவற்றை நினைத்து இந்தத் தர்மமுறையினையும் நினைத்து, தர்மத்தைக் காப்பீராக! இது அந்தந்தக் காலத்து அரசர்களின் காப்பு.

செப்பேட்டில் எழுத்து வெட்டிக் கையெழுத்திட்டவன்

அரசனது இந்த அருட்கொடையை ஸ்ரீராஜேந்திரச் சதுர்வேதி மங்கலத்துத் தச்சாசரியன் ஆராவமுது கணத்தானான சோழமாத்தாண்ட ஆசாரியன்.

நிறை கொண்டு மறமன்னர் சென்று கழல் பணியத்
திருந்துலகைப் பரின்தாண்ட ராஜேந்திரதேவன்
புறைகொண்டு நிறை கடகை மணிமுடிமேல் கூப்பிப்
புரிந்துரைக்கும் பரிந்தறத்தைத் தம்மறம் போல்காப்ப
இறையின்றி மறையோர்களுக் கென்று முணச்செய்த
ராஜேந்திரச் சருப்பேதிமங்கலத்தை என்றும்
விறல்மன்னர்க் கடைக்கலமாக குடுத்தந மென்றருளி
வேண்டினான் மேலாளும் வேன்தர்களைக் குறித்தே.

18. எல்லைகளில் குறுக்கீடும் நிலவகைக் குறிப்புகள் (கீழக்கில் தொடங்கி இறுதிவரை)

ராஜேந்திரச் சதுர்வேதி மங்கலத்தின் பிடாகை விட்டிலூர், திருவிந்தளூர் நாட்டு பண்டித சொழச் சதுர்வேதி மங்கலத்து மாஞ்சேய் என்ற நிலம், அருகே கற்பக வாய்க்கால், அருகே புற்றுகள் காமகோடி என்ற நிலம், புங்கமரம், அதன் வடக்கில் பறைச்சேரி திடல் இன்னாட்டு இச்சதுர்வேதிமங்கலத்தின் (பண்டிதசோழ . . . .), வடகிழக்கின் எல்லைக்கல், இச்சதுர்வேதிமங்கலத்திற்கு நீர்பாயும் கங்கை கொண்ட சோழன் வாய்க்கால், இச்சதுர்வேதிமங்கலத்தின் களியன் செய் என்ற நிலம் அதன் அருகில் உட்சிறு வாய்க்கால், களியன் நிலக்குட்டம், புற்றுகள், அகத்திடல், தெற்றிகுளம். கரிகால சோழ நல்லூருக்கும் ராஜேந்திரச் சருப்பேதி மங்கலத்துப் பிடாகை சேமங்கலம் உள்ளிட்ட ஊர்களுக்கு நீர்பாயும் சுந்தரசோழ வாய்க்கால். பண்டிதசோழ . . .த்து கொத்தை நாந் மா என்ற நிலம், ஆலை வேலி நிலம், நாரசிம்ஹ தேவர் நிலம், எல்லை வாய்க்கால், தென்எல்லை வாய்க்கால், ஆசாரியன் விளாகம், ராஜராஜன் வாய்க்கால். நாங்கூர் நாட்டு கடாரங்கொண்ட சோழச் சதுர்வேதிமங்கலத்து, பாலாஹூயன் நாராயணன் தாமோதிரன் நிலம், வராக்கியன் சிவன் நீலகண்டந் நிலம், இச்சதுர்வேதி மங்கலத்திற்கு (கடாரங்கொண்ட சோழ சதுர்வேதிமங்கலத்து அமநக வாய்க்கால்) நீர்பாயும் புரவுவரி வாய்க்கால், பிராமணன் வராக்கியன் மாறன் நாராயணன் நிலம், பிராமணன் பூவந்தன் பாதந்நிலம். இச்சதுர்வேதி மங்கலத்து திருச்சோமீஸ்வர முடைய மகாதேவர் நிலம், அருகே உட்சிறு வாய்க்கால்.

ராஜேந்திர சதுர்வேதிமங்கலத்தின் பிடாகை ராஜசிகாமணி நல்லூர் தேவர் குளம், கங்கைகொண்ட சோழ சதுர்வேதி மங்கலத்து எதிர்ச் சோழீஸ்வரமுடைய மஹாதேவர் நிலம், கடாரங்கொண்ட சோழ சதுர்வேதி மங்கலத்துக்கு நீர்பாயும் திருநீலகண்டன் வதி, தேவதானம் செம்பங்குடி புற்றுகள், ராஜேந்திர சதுர்வேதி மங்கலத்துப் பிடாகை அழகிய சோழ நல்லூர் நத்தம், புற்று குட்டியம்பலத்துக் குளம், அதிலே பாய்ந்த வாய்க்கால், நாட்டார் வாய்க்கால், ராஜராஜன் வாய்க்கால்,

தேவதானம் செற்றூர், புற்றுகள், திடல், குட்டம், புற்றுகள், அகரம் ராஜேந்திர சதுர்வேதிமங்கலத்துக்கு நீர் பாயும் பிணம் போகி என்ற வாய்க்கால், காவிரியின் மேல்கரையில் (இந்நாட்டு) உத்தமச் சோழச் சருப்பேதி மங்கலத்துப் பிடாகை விளங்குடி, பிராமணன் தேவன் சேந்தநீலன் கொங்கரையன் என்ற நிலம், முழையூர் வாய்க்கால் என்ற பழ வாய்க்கால் துர்ந்த நிலம், புற்றுகள், விளங்குடியிலுள்ள பொற்கோயில் ஏநாதி என்ற நிலம், மற்றும் கருப்படி என்ற நிலம், புற்று அசர வாய்க்கால், விளங்குடி எல்லை, எல்லைத்திடல், பூபேந்திர சோழப் பேராறு, இதன் வடகரையிலுள்ள இவ்விளங்குடியில் மும்மூலை என்ற நிலம், புற்று, எல்லைவாய்க்கால், இதன் வடகரையில் உள்ள விளங்குடி எல்லை, இவ்வெல்லையின் வடமேற்கிலுள்ள பண்டித சோழச் சருப்பேதி மங்கலத்துக்கு நீர்பாயும் செம்பியன் மாதேவிப் பேராற்றை இழிந்தேறி உத்தம சோழச் சதுர்வேதி மங்கலத்து பிராமணன் தேவன் சேந்தன் நீலன் கொங்கரையன் என்ற நிலம்.

(இந்நாட்டு) முழையூர்க்கு நீர் பாயும் சோழ வல்லந் என்ற வாய்க்கால், அகரம் ராஜேந்திரச் சதுர்வேதி மங்கலத்துப் பிடாகை, பநம்பள்ளித் திணையார் கோட்டகம் என்ற நிலம், இப்பிடாகை பஞ்சவ நல்லூர் நிலம், இந்நாட்டுக்கு நீர்பாயும் பூவேந்திர சோழப் பேராற்றின் கொல்லை, விளங்குடி வேட்டப்பேறு நிலம், வார வாய்க்கால், இவ்வேட்டப்பேற்று நிலத்துக்கு நீர்பாயும் சிங்களாந்தகன் வாய்க்கால் மற்றும் ஜயங்கொண்ட சோழ வாய்க்கால், வேட்டப்பேறு நிலத்திற்கருகில் உள்ள சுளகு முக்கி என்ற நிலம், உத்தமசோழ சதுர்வேதி மங்கலத்து பிராமணன் (ப)ங்கயக் கண்ணன் பனை விளாகம் என்ற நிலம், புற்று, கோட்டக வாய்க்கால் , புற்று, உத்தமச் சோழ சதுர்வேதிமங்கலத்து திருவிராமீஸ்வரமுடைய மஹாதேவரது புயலோக மாணிக்க மென்ற நிலம், இச்சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீவைகுந்தத்து தேவர் நிலம், உட்சிறு வாய்க்கால், ஆத்திரையந் நாராயண பரமேஸ்வரன் இடைக்கடை, அரமியந் நாராயணந் சேந்தன்நிலம், அரமியர் பாண்ட கருணாகரந் புக்கஞ் சுற்று என்ற நிலம், ஸ்ரீவைகுந்தத்தில் தேவர் காரைத்தெற்றி என்ற நிலம், கொங்க வாய்கரை, புற்று, காடேற்று வாய்க்கால், சாட்டாணி நாகக்கிரமவித்தன் காடேறு என்ற நிலம், திருவரங்க வாய்க்கால், திருச்சாநி என்ற நிலம், சேந்தங்குடி திருமயிலாடுதுறை மஹாதேவர் விளாகம் என்ற நிலம், சேந்தங்குடி சகாப் போத்தந்னாந மா என்ற நிலம், திருமாலிருஞ்சோலை கிரமவித்தந் செய், இராயூர் வாமன் கிரமவித்தந் செய், இலந்தை படர்ந்த புற்று, நாணல் நின்ற புற்று, இசங்கின நற்புற்று, சீராமக் கிரமவித்தன் செய், காராம்பிச் செட்டு அடிகள் நம்பி தசப்பிரியன் செய், சேந்தங்குடி பறைத்துடவை என்ற நிலம், சேந்தங்குடி பறைச்சேரி நத்தம், சேந்தன்குடி பழவூர் தேவர் செய், ஈங்கை படர்ந்த புற்று, அமநக வாய்க்கால், சாக்கை வேலி என்ற நிலம், அழிஞ்சிற்புற்று.

இந்நாட்டு கஞ்சாற்றுக்கு நீர் பாயும் வாய்க்கால், பிரமதேயம் சேந்தங்குடி பள்ளி கொண்ட தேவர் நிலம், சேந்தங்குடி ஏரி, இவ்வூர் காராம்பிச் செட்டு கேசவக் கிரமவித்தந் ஏரி நிலம், பூவேந்திர சோழப் பேராற்று வடகரையில் இழிந்து

தென்கரையில் ஏறின எல்லை, இச்சேந்தங்குடி கொக்கரை சீராமக் கிரமவித்தந்செய், உத்தமசோழ சதுர்வேதி மங்கலத்திற்கு நீர்பாயும் வாய்க்கால், புற்று, சேந்தந்குடி வடமயிலாடுதுறை மகாதேவர் கோயிலின் வடக்கில் குளம், காவிரி, திருவிந்தளூர் எல்லையின் மேற்கு, இவ்வூர் கீழெல்லைவிட்டு வடக்கு, ஜயங்கொண்ட சோழப்பேராறு, பூவேந்திரசோழப்பேராறு, திருவிந்தளூர் பல்லவை நிலம், இவ்வூர் பள்ளிகொண்டருளின தேவர் குளம் மற்றும் நந்தவனம், இதன் வடக்கில் தேர் போகு வீதி, திருவிந்தளூர் திருத்தான் தோன்றீஸ்வரமுடைய மஹாதேவர் குளம், இதன் தென்கரையில் உள்ள எல்லைக் கல், இக்குளத்தின் நீர்நிலை, வடகரையில் நாட்டப்பட்டுள்ள எல்லைக்கல், திருவிந்தளூர் வடவெல்லையும், இவ்வூர் தேவதானத்து தெந்எல்லையும் கூடின இடம், புற்று, கஞ்சாற்றுக்கும் ஆர்க்காடான கப்பலூர்க்கும் நீர்பாயும் புதுவாய்க்கால், புற்று.

திருவாலிநாட்டு மும்முடிசோழ சதுர்வேதிமங்கலத்துக்கு நீர்பாயும் ஜநநாதப் பேராறு, தேவதான நிலம், சக்கிரபாணி என்ற குளம், திருவிந்தளூர் எல்லைக்குலை.

இந்நாட்டு அழகிய சோழச் சதுர்வேதிமங்கலத்து கூடின ஆலங்குடி எல்லை வாய்க்கால், ஆலங்குடி வேட்டப்பேறு என்ற நிலம், புற்று, இச்சதுர்வேதி மங்கலத்து பிராமணன் இராயூர் சொட்டை மாதவ பட்டன் நிலம் மற்றும் பட்ட ஆதித்தக்களம் என்ற நிலம், தம்பிரான் என்ற குட்டம், ஊமைக் குட்டம், பழவாய்க்கால், மண்மலை என்ற குட்டம், அதன் மேலைத்திடல், வற்றலூர் ஸ்ரீமாதவ பட்டன் நிலம், மணலூர் வாய்க்கால், செந்நி வாய்க்கால் ஆளப்பிறந்தான் வாய்க்கால், ஏழேகால் குட்டம்.

மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து இருபதிற்று வேலி என்ற நிலம், புற்று, ஓடை, அழகிய சோழ. . . . .பிராமணன் அட்டாமபுறத்து ஓடைக்கரை என்ற நிலம், புற்று, எல்லை வாய்க்கால், அகரம் ராஜேந்திரச் சருப்பேதி மங்கலத்து மேல்பிடாகை ஊர்களுக்கு நீர்பாயும் ஆளப்பிறந்தான் வாய்க்கால், புற்று மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து எல்லை, இவ்வாய்க்கால் கீழ்கரை அகத்திடல், இச்சதுர்வேதிமங்கலத்து எல்லை வாய்க்கால், புற்று, தேவதானம் பாண்டூர் எல்லை, விக்கிரமசோழச் சதுர்வேதிமங்கலத்து எல்லைவாய்க்கால், புதுக்கொண்டல் வாய் என்ற ஓடை, புற்று, ஆலவாய் ஓடை, விக்கிரமசோழ சதுர்வேதிமங்கலத்து எல்லை, ஜயங்கொண்ட சோழ வாய்க்கால், பழங்கொண்டல் வாய் தூர்ந்த நிலம், பழங்கொண்டல் வாய்குட்டம், கொண்டல் வாய் உடைப்பு நின்றும் கிழக்கு நோக்கிப்போன ஓடை, புற்று, இவ்வோடையின் மேல்கரை, வடகீழ்மூலை துரம்பு, கொண்டல் எல்லை, புற்று, ஓடையின் மேல்கரை, விக்கிரமசோழச் சதுர்வேதிமங்கலத்து கீழ்எல்லை, பழவாற்றின் தென்கரை நத்தத்திடல் , இத்திடலில் கிழக்கடைய நின்ற தெங்கு, பழவாற்றின் தெற்கு பிரமதேயம் வில்லிய நல்லூர் எல்லை, பழவாற்றில் பழவோடை.

ராஜேந்திரச் சருப்பேதி மங்கலத்துப் பிடாகை திருப்பாலைக்குடி ஊர் நத்தத்தின் மேலைக்குளம், பழவாற்றில் கொண்டற்பால் கிள்ளியூர் மஹாதேவர் நிலம், இத்தேவதானத்து நத்தத்து மூலையில் கிழக்கடைய நின்ற தெங்கு, கிள்ளியூர் மகாதேவர் ஸ்ரீகோயிலின் தென்மேல் மூலைத்திடல், உட்சிறுவாய்க்கால், பிடாரிகோயில் பலிபீடம் வில்லிய நல்லூர் எல்லை புற்று, புல்லூர்படுகை, புல்லூர் நாற்றுக்கால் வாய்க்கால், புற்று, பழவாய்க்கால், களத்திடல், புற்று, அவ்வாற்றின் தென்கரை, வடகரையில் இந்நாட்டு சத்திரிய சிகாமணிச் சதுர்வேதிமங்கலத்தின் எல்லையும் ஆதனவாயு வடகுலை, புற்று, ஆளப்பிறந்தான் வாய்க்காலின் வடகரையில் வைப்பூர் எல்லை, புற்று, இன்னாட்டு சோளேந்திர சிங்கநல்லூர் மேல் எல்லை வாய்க்கால், பாலோடை என்ற ஓடை, சோளேந்திரசிங்க நல்லூர் எல்லை, சோளேந்திரசிங்கநல்லூர் காவிதிக்கால் என்ற நிலம், புற்று, சோழமாத்தாண்ட நல்லூர் எல்லை, மண்ணிஓடை, ஆர்க்காடான கப்பலூர் எல்லை, உவநதி, மண்ணியோடையில் சோழ மாத்தாண்ட நல்லூர், இடைப்பழையாறு என்று பேர் கூவப்படும் நிலம், புற்று, மண்ணிப்படுகை நிலம், ஆர்க்காடான கப்பலூர் எல்லை, மேற்குநோக்கிச் செல்லும் மண்ணியில் ஜநநாதப் பேராற்றுப் புற்று, இப்பேராற்றின் தென்கரை, அதன் கீழ்கரைக்குலை, இந்நாட்டுக் கஞ்சாற்றில் வடகீழ் மூலையில் நல்லூர் குலை புற்று, எல்லை வரம்பு ஓடையில் கஞ்சாற்று எல்லை.

அகரம் ராஜேந்திரச் சருப்பேதி மங்கலப்பிடாகை கொற்ற நல்லூர் வடவெல்லைக்குலை, இதன் தெற்கு இவ்வாற்றுப் பெருங்குடும்பென்ற ஓடை, இதன் தென்கரை, புற்று, இக்கஞ்சாற்றுப் பொன்னம்பல மசக்கல் என்ற செய், இதன் தென்கிழக்கில் சுடுகாட்டுத்திடல், புற்று, மாதேவவாய்க்கால் ஆற்றங்கரை, புற்று, இவ்வாற்றங்கரையின் தென்மேற்கிலுள்ள இரட்டைப்புற்று, ஜநநாதப்பேராற்று வடகரை, ஆற்றங்கரைப்புற்று, குலையில் நாணல் நின்ற புற்று, இந்த ராஜேந்திரச் சருப்பேதி மங்கலத்துப் பிடாகை நீடூர் நிலத்தின் கீழ் எல்லை சனனாதப் பேராறு, கஞ்சாற்று வாய்க்காலின் மேல்கரை நாணல் நின்ற புற்று, ஆர்க்காடான கப்பலூர்க்கு நீர்பாயும் அபிமாந ராமன் என்ற வாய்க்காலின் தென்கரை, புற்று, கஞ்சாற்றுக் கோழிக்குத்தியென்ற நிலம், முதுகுழி என்ற நிலம், திருவேங்கட மசக்கல் என்ற நிலம், கோமவந்வேலி என்ற நிலம், புற்று, மதநந்வேலி என்ற நிலம், புற்று, அரசந்திடல், தறிச்சநவர் ஓடை, கஞ்சாற்று அடிகள் குளமென்ற நிலம், புற்று, பிரமதேயம் வழிநலக்குடி பாரதாயன் கூத்தநடிகள் காடுகாள் பாத்தி என்ற நிலம், இவ்வழிநலக்குடி வாக்கியந் நாகன் ஸ்ரீகிருஷ்ணந் களிக்காலென்ற நிலம், இவ்வூர் வாச்சியன் திரிவிக்கிரமன் அப்பங்கால் என்ற நிலம், நாணல் நின்ற புற்று, காரைப்புற்று, வழிநலக்குடிப் பாரதாயன் காடன் நக்கன் பெருமான் கொல்லை என்ற நிலம், அகரம் ராஜேந்திரச் சதுர்வேதி மங்கலத்துப்பிடாகை கொற்றங்குடி நிலம்,

இவ்வூர் பிடாகை மஹிமாபரண மங்கலத்து நிலம், அதன் வடமேல் மூலை கூடின இடத்தில் காக்கைவாய் என்ற ஓடை, முழையூர்க்கு நீர்பாயும் வாய்க்கால், புற்று, முழையூர் எல்லை, பண்டிதச் சோழச் சருப்பேதி மங்கலத்து நிலம், எல்லை வாய்க்கால், இச்சருப்பேதி மங்கலத்துக்கு நீர்பாயும் செம்பியன் மாதேவிப் பேராற்றின் நீரோடு கால், இம்மங்கலத்தின் தென்மேல் எல்லையில் ராஜராஜன் வாய்க்கால், எல்லை வாய்க்கால் முன்பு துடங்கின வடகீழ் மூலை எல்லை, பிரமதேயம் திருவிந்தளூர் மேல் எல்லை, திருவிந்தளூர்த் தேவதானத்து நிலம், திருவிந்தளூர் நிலமாய் அகரம் ராஜேந்திரச் சருப்பேதி மங்கலத்தோடும் கூடின நிலம், பூவேந்திர சோழப் பேராற்றின் வடகரை, ஜயங்கொண்ட சோழப் பேராறு, இதன் தென்கரை, காவிரியில் வடகரை, காவிரியிலுறுப்பிவாயென்ற ஆறு, திருவிந்தளூர் எல்லை, பிரமதேயம் அழகிய சோழச் சருப்பேதி மங்கலத்து கீழ் எல்லை, காவிரியின் வடகரை, குலையில் நின்ற அரசு, பூவேந்திர சோழப் பேராறு, அழகிய சோழச் சருப்பேதி மங்கலத்துப் பிடாகை நாகன்பாடி நத்தத்தின் தெரு, புற்று, அழகிய சோழச் சருப்பேதி மங்கலத்து ஸ்ரீகைலாசத்து மகாதேவர் நிலம், புற்று, திருவிந்தளூர்த் தேவதானத்துத் தென்மேல் மூலைஎல்லை, ஆர்க்காடான கப்பலூர்க்கு நீர்பாயும் வாய்க்கால்.

அகரம் ராஜேந்திர சருப்பேதி மங்கலத்துப்பிடாகை அன்னியூர் ஏகபோகம் நீர்நிலம், குறுக்கை நாட்டு சுத்தமலிச் சருப்பேதி மங்கலத்து நிலத்து தலை நெற்றி மூன்றுமா என்ற நிலம், புற்று விஸ்வம் பார்ப்பான் என்னும் வாய்க்காலின் வடகரை, புற்று, மதுராந்தகச் சருப்பேதி மங்கலத்து எல்லை, புற்று, இவ்வன்னியூர் வெள்ளாந் வகை எல்லைக்கு நீர்பாயும் ஸ்ரீதேவி வாய்க்கால், இச்சதுர்வேதி மங்கலத்து எல்லை வரம்பு, கங்கை கொண்ட சோழச் சருப்பேதி மங்கலத்து கற்பக மாணிக்க வாய்க்கால், இச்சருப்பேதி மங்கலத்தின் வொடையிலுள்ள குட்டம், உத்தம சோழத் திருமங்கலத்து எல்லை வரம்பு, புற்று, விஸ்வம் பார்ப்பான் என்ற வாய்க்கால், அகரம் ராஜேந்திரச் சதுர்வேதி மங்கலத்தோடும் கூடின அன்னியூர் ஏகபோகம் பிரம்மதேயம் அன்னியூர் எல்லை, மதுராந்தகச் சருப்பேதிமங்கலத்து எல்லையோடு கூடின இடம், இந்த நத்தத்தின் வடகீழ் மூலையிலே துடங்கி மதுராந்தகச் சருப்பேதி மங்கலத்து எல்லை, பிரம்மதேயம் அன்னியூர் நத்தத்து எல்லை, பாலோடையில் வடகரை ஒன்றரை என்ற நிலம், இதன் வடகீழ் மூலை சோழ மாத்தாண்ட நிலமான அக்காரக் குடுக்கை, சோழமாத்தாண்ட நல்லூர் எல்லை, புற்று அகரம் ராஜேந்திரச் சதுர்வேதி மங்கலத்துப் பிடாகை மணி கங்கை நிலம், வடகீழ் மூலை, கஞ்சாறம் காடாகிய முழுச்சங்குடி, இளவெருமல் நிலத்து தென் எல்லையும் பண்டிதச் சோழச் சதுர்வேதி மங்கலத்து மேல் எல்லையும் கூடிந விடத்து தறிச்சவர் என்ற ஓடை, எல்லை வாய்க்கால், ஆர்க்காடான கப்பலூர் எல்லை, ஓடையின் மேல்கரை, பனங்குடி எல்லை, புற்று, தறிச்சனவர் ஓடையின் மேல்கரை, புற்று, இவ்வகரம் ராஜேந்திர சருப்பேதி

மங்கலத்துப் பிடாகை சேமங்கலத்து எல்லையும் நாங்கூர் எல்லையும் கூடிந இடம், புற்று, எல்லை வாய்க்கால், கிடாரங் கொண்ட சோழச் சருப்பேதி மங்கலத்து வடவெல்லை, அகரம் ராஜேந்திர சருப்பேதி மங்கலத்துப் பிடாகை சேமங்கலத்துக்கு நீர்பாயும் வாய்க்கால், பிரம்மதேயம் ஆல்வேலியின் கீழெல்லை, புற்று, ராஜாஸ்ரீய மங்கலத்துக் குளிர்கோயில் ஈஸ்வரத்துத் தேவர் நிலம், உழுத்துக்குப்பை மஹாதேவர் நிலம், திருவிந்தளூர் திருத்தாந்தோன்றி ஈஸ்வரமுடைய மகாதேவர் கோயில் நிலம், திருவிந்தளூர்ப் பள்ளி கொண்டருளின தேவர் நிலம், அகரம் ரஜேந்திர சருப்பேதிமங்கலத்து சபையார் தலைமாறாகக் குடுத்த இவ்வூர்ப்பிடாகை பெரியன் குடி நிலம்.

19. தமிழ்ப்பகுதியில் இடம்பெறாத கொடை பற்றிய சில குறிப்புகள்

சமஸ்கிருதப் பகுதியின் இறுதியிலுள்ள 193 முதல் 195 வரையுள்ள சுலோகங்களில் மன்னன் இராஜேந்திரனால்(II) அரசவையில் சிறப்பிடம் கொடுத்து மதிக்கப்பட்டவனும் ஹரிகிருஷ்ணனிடம் நீங்காத பக்தியுடையவனும், சிறுநாவலூர் என்ற ஊரைச் சேர்ந்தவனும், சக்கரபாணியின் புதல்வனும், ஆரியசர்மனின் முதல் மாணாக்கனுமான பிரம்மதேவன் என்றும் பிரம்ம பல்லவராஜன் என்றும் அழைக்கப்பட்ட பிரம்மாத்மன் என்பவனால் பலராலும் புகழப்பெற்ற மென்மையும் இனிமையுமுடைய இந்த 'பிரசஸ்தி' எழுதப்பட்டது என்றும், இராஜேந்திரனின் நான்காம் ஆட்சியாண்டின் அறுபத்து ஒன்பதாம் நாளில், கப்பலூர் என்ற ஊர், இராஜேந்திர மங்கலம் என்று புதியதாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு 'தன் பட்டாபிஷேக தட்சிணை'யாக மன்னனால் அவனுக்கு வழங்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

அடுத்து வரும் 196 முதல் 201 வரையிலான சுலோகங்களில், வீர ராஜேந்திரனின் இரண்டாவது ஆட்சியாண்டின் 127-ஆம் நாளில், முன்னர் குறிக்கப்பட்ட 'தன் அபிஷேக தட்சிணை'யாகப் பிரம்மதேவனுக்குக் கொடுக்கப்பட்ட தானம் நிலை நிறுத்தப்பட்டது என்றும், அவனுடைய இரண்டாம் ஆட்சியாண்டின் எண்பத்து ஒன்பதாம் நாளில், கங்கை கொண்ட சோழபுரத்துத் திருமஞ்சன சாலையிலிருந்து சந்திர பூஷண கவிக்கு இராஜாதிராஜ வளநாட்டிலுள்ள புல்லூரின் தென்பகுதியில் அமைந்த 12 வேலி நிலம் 'சாசன ஸ்லோக தட்சிணை'யாக வழங்கப்பட்டது என்றும், இந்நிலத்தின் மூலம் அரசு வருவாயான 627.5 பாரம் அளவுள்ள நெல் வரிநீக்கம் செய்யப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து சமஸ்கிருதப்பகுதிக்கான விளக்கத்தில் டாக்டர் சங்கர நாராயணன் அவர்கள், இராஜேந்திரனால் அவனது பட்டாபிஷேக தட்சிணையாக வழங்கப்பட்ட நிலம், இந்த சமஸ்கிருதப்பகுதியில் இடம்பெறும், அவனது முடிசூட்டு

விழா பற்றி மிகவிரிவாகவும் அழகாகவும் ஒன்பது சுலோகங்கள் (எண் 135-143) எழுதியதைச் சிறப்பித்து வழங்கப்பட்ட சிறப்புக்கொடை என்கிறார். முத்திரையில் இடம்பெறும் சுலோகமே 'சாசன சுலோகம்' என்று சிறப்பித்துக் கூறப்படுவதாகவும், இதனையும் தமிழ்பகுதியின் இறுதியில் இடம்பெற்றுள்ள சமஸ்கிருத சுலோகத்தையும் எழுதிய சந்திரபூஷணருக்கு அளிக்கப்பட்ட சிறப்புக் கொடையே 'சாசனஸ்லோக தட்சிணை' என்றும் விளக்கம் அளித்துள்ளார்.

இவ்விரண்டு சிறப்புக் கொடைகளுமே வீரஇராஜேந்திரன் காலத்தில் முடிவு செய்யப்பட்டு இச்செப்பேட்டின் சமஸ்கிருதப்பகுதியில் இறுதியாக இணைக்கப்பட்டதாலேயே இச்சுலோகங்கள் எழுதப்பட்ட முறையும் மிகவும் கவனமற்று எழுதப்பட்டதாக உள்ளது என்றும் குறிப்பிடுகிறார். ஆனால் மேற்குறித்த இவ்விரு கொடைகள் பற்றிய குறிப்பு தனிச்சிறப்புடன் தமிழ்ப்பகுதியில் குறிக்கப்படவில்லை. எனினும், பிரம்மாத்ம பட்டருக்கு இருதடவைகளில் கொடுக்கப்பட்ட பங்குகளாக (3+1) நான்கு பங்குகளும், (ஏடு 65, பின் பக். வரி 10,11), சந்திரபூஷண பட்டருக்கு இரண்டு தடவைகளாக (4+1) ஐந்து பங்குகளும் (ஏடு 79, பின் பக். வரி 3; ஏடு 81, பின் பக். வரி 11-12) கொடுக்கப்பட்டதாக குறிக்கப்படுகிறது. இவர்களில் முறையே முன்னவருக்குப் 'பெருமாளைச் சாசனஸ்லோகஞ் சொல்லியதற்குத் தட்சிணை பங்கு ஒன்று' என்று தனித்துக்குறிப்பிட்டும், பின்னவருக்கு 'இவ்வூர்ப் பிரஸ்தி சொல்லியதற்குத் தட்சிணை பங்கு ஒன்று' என்றுத் தனித்துக் குறிப்பிட்டும் கூறப்பட்டிருப்பதுமாகிய இந்தக் குறிப்புகள், பங்கு பெற்றோர் விவரங்களைக் குறிக்கும் இடத்திலேயே இடம்பெறுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. சமஸ்கிருதப் பகுதியில் இது தனியாணையாகவும், நில அளவும், வரிவருவாயும் தனியாகவும் குறிக்கப்பட்டுள்ளது. அதனால், இது தனிக்கொடை என்றும், அதிகாரிகளே நிர்வாக நடைமுறையின் போது இணைத்துக் குறிப்பிட்டுவிட்டார்கள் என்றும் கருத்துரைக்கிறார் சமஸ்கிருதப்பகுதிப் பதிப்பாசிரியர் (பார்க்க. பக். 28).

தமிழ்ப்பகுதியில் உள்ள இந்த குறிப்பின்படி நோக்கினால் பிரம்மாத்மர், பெருமாளுக்குச் (அரசனுக்கு) சாசனஸ்லோகம் எழுதினார் என்ற பொருளும், சந்திர பூஷணர் இவ்வூருக்குப் பிரசஸ்தி பாடினார் என்ற பொருளும் வருகிறது. முன்னது அரசனைச் சிறப்பிப்பதாகவும், பின்னது இவ்வூரை-அதாவது அகரபிரம்மதேயம் இராஜேந்திரச் சதுர்வேதி மங்கலத்தை-சிறப்பிப்பதாகவும் அமைகிறது. ஆக இவ்விருவருமே இந்தச் செப்பேட்டு வாசகத்தின் பகுதிகளை எழுதியிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. அதே நேரத்தில் சமஸ்கிருதப்

பகுதியில் 'ஸ்வாபிஷேக தட்சிணை' என்று இராஜேந்திரன் கூறுவது 'பெருமாளை சாசன ஸ்லோகஞ் சொல்லியதற்குத் தட்சிணை' என்ற தமிழ்ப்பகுதி வரிகளுக்கு இணையானது போலவே தோன்றுகிறது. எனவே இவ்விருவருக்கும் கொடுக்கப்பட்ட சிறப்புத் தானங்களில் ஏதோ குழப்பம் இருந்திருக்கலாம் என்றும், அது வீரஇராஜேந்திரனால், இச்செப்பேடு எழுதப்பட்ட காலத்தில் தீர்வு செய்யப்பட்டு செப்பேட்டில் இடம் பெற்றதையே, தமிழ்ப்பகுதியின் இறுதியில் இடம்பெற்றுள்ள, 'வீரராஜேந்திரனின் நியோகம்', 'சந்திரபூஷணனின் சாசனம்' ஆகிய குறிப்புகள் எடுத்துக்காட்டுகின்றன என்றும் கொள்ளலாம்.

20. சோழ பாண்டியன்

முதலாம் இராஜேந்திர சோழன் தனது சொந்த மகனைச் சோழ பாண்டியனாக நியமித்துப் பாண்டிய நாட்டைக் காக்கும்படி செய்தான் என்கிறது திருவாலங்காட்டுச் செப்பேடு [சுலோகம் 93]. அவன் யார் என்பது குறித்த விளக்கம், திருவிந்தளூர்ச் செப்பேடு குறிப்பிடும் தப்ரசபாதிபனைப் புரிந்துகொள்ளத் தேவையாகிறது.

திருவாலங்காட்டுச் செப்பேடு வெளியிட்ட ஆண்டாகிய கி.பி. 1018-இல் தான் முதலாம் இராஜாதிராஜனும் முடிசூட்டப்பட்டிருக்கின்றான். இச்செப்பேட்டில் எழுதப்பட்ட ஆணை வெளியிடப்பட்ட நாள் முதலாம் இராஜேந்திரனின் ஆறாம் ஆட்சியாண்டின் 19-ஆம் நாள்.

6-ஆம் ஆட்சி ஆண்டின் தொடக்கம் : கி.பி. 1018-ஜூன்-19
நாள் 19 = கி.பி. 1018-ஜூலை-8
ஆதலால் செப்பேடு வெளியிடப்பட்ட ஆண்டு கி.பி. 1018 ஜூலை 8 ஆகும்.

இச்செப்பேடு கணக்கில் இடப்பட்ட ஆண்டு 7-ஆம் ஆட்சியாண்டின் 155-ஆவது நாளில்தான்

7-ஆம் ஆட்சி ஆண்டின் தொடக்கம் : கி.பி. 1019-ஜூன்-19
நாள் 155 = கி.பி. 1019-அக்டோபர்- 19
ஆதலால் கணக்கிலிடப்பட்ட ஆண்டு கி.பி. 1019-அக்டோபர்-19 ஆகும்.

முதலாம் இராஜாதிராஜன் முடிசூடிய வருடம் கி.பி. 1018-ஜூன்-8

திருவாலங்காட்டுச் செப்பேடு வெளியிடப்படுவதற்கு ஒரு மாதம் முன்னர் தான் முதலாம் இராஜாதிராஜன் முடிசூட்டப்பட்டிருக்கிறான். (See SII.Vol III. p. 392)

கி.பி. 1020-21-இல் முதலாம் இராஜேந்திரன் தனது இரண்டாவது மகனைச் சுந்தரசோழ பாண்டியன் என்ற பெயரில் சோழ பாண்டியனாக நியமித்துள்ளான் என்பதையும், அது தொடங்கி அப்பெயரிலேயே அவனது கல்வெட்டுகள் பாண்டி நாட்டில் இடம்பெறுவதையும் காணமுடிகிறது (SII.Vol XIV Nos 131-181).

முதலாம் இராஜேந்திரசோழனின் இந்த இரண்டாவது மகனையே திருவிந்தளூர்ச் செப்பேடு தப்ரசபாதிபன் என்று கூறுகிறது. இவனே அண்ணன் முதலாம் இராஜாதிராஜனுடன் சாளுக்கியப் படையெடுப்பில் பங்கு கொண்டு அண்ணன் இறப்பிற்குப் பின்னும் வெற்றி வாகை சூடினான் என்றும், நாடு திரும்பிய பின் இரண்டாம் இராஜேந்திரன் என்ற பெயரோடு முடிசூட்டப்பட்டான் என்றும் திருவிந்தளூர்ச் செப்பேடு மூலம் அறியப்படுகிறது.

தப்ரசபாதிபன் என்பதை இவனது இயற்பெயராக இச்செப்பேட்டின் சமஸ்கிருதப்பகுதி கூறியிருக்க, வேறெந்த ஆவணங்களிலும் இப்பெயர் காணக்கிடைக்கவில்லை.

முதலாம் இராஜேந்திர சோழன், இளவரசனாகிய முதலாம் இராஜாதிராஜனுக்குப் பின்னுள்ள இளவரசர்களையே பாண்டி நாட்டுக்கும் சேர நாட்டிற்கும் பொறுப்பாளர்களாக நியமித்ததை K.A. நீலகண்ட சாஸ்திரியும் சுட்டிக்காட்டுகிறார் (The Cholas p.196-7). சோழ பாண்டியன் என்ற பதவி உருவாக்கப்பட்டுத் தம்பி தப்ரசபாதிபன் சுந்தரசோழ பாண்டியனாகப் பதவியேற்கும் வரை முதலாம் இராஜாதிராஜன் (கி.பி. 1018-20-21 வரை), பாண்டி நாட்டிற்குப் பொறுப்பாளனாக இருந்திருத்தல் வேண்டும் எனக் கொள்வதில் எவ்வித இடர்ப்பாடும் இல்லை. ஏனென்றால் முதலாம் இராஜராஜன் காலத்தில் பாண்டி நாட்டை வெற்றிக் கொண்ட காலத்திலிருந்தே இப்படி ஒரு தேவை ஏற்பட்டிருந்தது.

முதலாம் இராஜாதிராஜனின் 29-ஆம் ஆட்சியாண்டின் (கி.பி. 1047) மணிமங்கலம் கல்வெட்டு [SII. Vol III No:28] தொடக்கத்தில் தன் உறவினர்களுக்கு அளித்த பதவி பற்றிக் கூறிய பின்னர் அவனது வெற்றிகளை வரிசைப்படுத்துகிறது. அதில் முதலில் கூறப்படுவது, பாண்டிய நாட்டில் பாண்டியர் மூவருடன் போரிட்டு வெற்றி பெற்ற செய்தியாகும். அதன் பின்னரே சேர நாட்டரசர், சாளுக்கிய நாட்டரசர் மீது பெற்ற வெற்றிகளும் பிற வெற்றிகளும் வரிசைப் படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே இராஜாதிராஜன் இளவரசு பட்டம் எய்தியவுடன் மேற்கொண்ட முதல் போர் பாண்டியர் மீது மேற்கொண்ட போர் எனத்தெரிகிறது.

பாண்டிநாடு ஏற்கனவே முதலாம் இராஜராஜன் காலத்திலேயே சோழர் வசமாகிய பின்னரும் பாண்டியரின் எழுச்சியைத் தடுக்க முடியவில்லை. பாண்டியர் மூவர்-மானாபரணன், வீரகேரளன், சுந்தரபாண்டியன் ஆகியோர்-பாண்டி நாட்டின் ஆளுமைக்காக எதிர்த்த போது அவர்களை இராஜாதிராஜன் போரிட்டு வென்ற செய்தியே விரிவாக மெய்க்கீர்த்தியில் கூறப்பட்டிருக்கிறது. இப்போர் தப்ரசபாதிபனைச் சுந்தரசோழ பாண்டியனாக அமர்த்தியதற்கு முன்னரே நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

மற்றுமிரு முக்கியமான செய்திகளும் மணிமங்கலம் கல்வெட்டிலுள்ளன. கோவிராஜகேசரி வர்மரான உடையார் ஸ்ரீஇராஜாதிராஜதேவர் என்ற மன்னர் பெயருக்கு முன்னர் 'ஜயங்கொண்ட சோழன் உயர்ந்த பெரும் புகழ்' என்ற தொடர் உள்ளது. இத்தொடர் அம்மன்னன் பெரும்புகழ் பெற்றதன் காரணமாக ஏற்பட்டது என்றே இதுவரை பொருள் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் ஜயங்கொண்ட சோழன் என்ற அவனது இயற்பெயரையே சுட்டுகிறது என்பதைத் திருவிந்தளூர்ச் செப்பேட்டின் செய்தி வழி முதன்முதலாக புரிந்துகொள்ள முடிகிறது.

அதுபோல இக்கல்வெட்டிலுள்ள மற்றுமொரு செய்தி மன்னனது கொடை பற்றியது. வெற்றிகொண்ட பல்வேறு அரச பரம்பரையினரைப் பட்டியலிட்டு அவர்கள் இடும் திறைகளில் ஆறில் ஒரு பங்கையும், அவனியில் கூறாகக் (வரியாக) கொள்கின்ற பொருள்களையும் மிக்க உவகையுடன் முகந்து கொள்ளும்படி மறையவர்களுக்குக் கொடுத்தது பற்றி இவனது மெய்க்கீர்த்தி விரிவாகக் கூறுகிறது. இச்செப்பேடு குறிக்கும் மாபெரும் தானம், கல்வெட்டுச் செய்தியினை உறுதிப்படுத்துவதாக உள்ளது (சமஸ்கிருதப் பகுதி செய்யுள் எண்: 180 பார்க்க).

21. செப்பேட்டின் தனிச்சிறப்பு

